# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 13 பிப்ரவரி - 2000 இதழ் - 2




அதிகாலையில் உமது கிருபையைக் கேட்கப் பண்ணும்,
உம்மை நம்பியிருக்கிறேன், நான் நடக்க வேண்டிய வழியை
எனக்குக் காண்பியும்...... சங்கீதம் 143:8


# வாசகர்களின் கவனத்திற்கு

திருமறை ஆசான் மாத இதழைத் தொடர்ந்து பெற விரும்புவோர் தங்கள் பதிவு எண்ணைத் தவறாமல் குறிப்பிட்டு, தெளிவான முகவரியுடன் எங்களுக்குக் கடிதம் எழுதுங்கள்.

உங்களிடமிருந்து எந்தப் பதிலும் வரவில்லையெனில் இதழ் நிறுத்தப்படும் என்பதை வேறு வழியின்றி வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். தயவுசெய்து ஒத்துழையுங்கள்.



ஆசிரியர்.



## ஆசானின் அறிவுரையிலே


| | | |
|---|---|---|
| 1. | ஆசிரியர் உரை | 01 |
| 2. | மன்னிப்பது எப்படி? | 10 |
| 3. | பெண்கள் பகுதி | 16 |
| 4. | கர்த்தருக்கு கீழ்ப்படியுங்கள் | 19 |
| 5. | வாலிபர் பகுதி | 20 |
| 6. | வெளிப்படுத்தின் விசேஷம் | 24 |
| 7. | விசுவாசத்தின் அடிப்படைகள் | 30 |

# THIRUMARAI AASAAN

**Published by Church of Christ**



**Editor**
**S. RAJANAYAGAM**

**Honorary Editor**
**J.C. CHOATE**


**Dharapuram Road, KANGAYAM - 638 701, Tamil Nadu, India**


**Pleading for the restoration of pure New Testament Christianity**


**Vol .13 | February - 2000 | Issue - 2**


*ஆசிரியவுரை*

## கிறிஸ்துவுக்குள் ஒருமைப்பாடு



சீயோன் மலை மீது கட்டப்பட்டுள்ள எருசலேமில் உள்ள ஒரு எளிய இரண்டு அடுக்கு மாடியின் உள்ளே என்ன நடக்கிறது என்று எட்டிப்பார்க்கிறதாகக் கற்பனை செய்து கொள்ளுங்கள். அங்கே நீங்கள் காண்பது என்ன? பதிமூன்று மனிதர்கள் அங்கே அமர்ந்திருக்கிறார்கள். அதில் ஒருவர் குரு, மற்ற பன்னிரண்டுபேரும் சீடர்கள் அல்லது தொண்டர்கள். குருவானவர் முகத்தில் என்றுமே இல்லாத ஒரு வித சோகம், ஏனெனில் தனக்கு மிகவும் நெருக்கமான தன்னால் நேசிக்கப் பட்ட ஒரு நண்பனே இந்த இரவிலே தன்னைக் காட்டிக் கொடுக்கப் போகிறான். தான் மரணத்துக்கு ஒப்புக் கொடுக்கப்படுவது உறுதி என்று அவருக்குக் தெரிந்திருந்தது. அவர் மரணத்துக்கோ, வேறே ஒரு சிறு தண்டனை அடைவதற்குரிய எந்தவொரு குற்றமும் செய்யவில்லை. என்றாலும் அடுத்த நாள் மாலைக்குள் அவர் மரணத்தை ருசி பார்ப்பது உறுதி. சரீரத்தில் ஏற்படும் வேதனையின் உச்ச கட்டத்தை அனுபவிக்கப் போகிறார் என்பது திண்ணம். அதை நினைத்துப் பார்த்து உள்ளத்தில் வேதனைப் பெரு மூச்சோடு பிதாவை நோக்கி மன்றாட மண்டியிடுகிறார்.

முதலாவது அவர் தம்முடைய நிலையைக் குறித்து மன்றாடுகிறார். பிதா தனக்கு ஒப்படைத்த பணியினை வெற்றிகரமாக முடித்து விட்டு தான் வந்த நோக்கத்தை நிறைவு செய்துவிட்டபடியால் ஆரம்பத்தில் அவருக்கு இருந்த மகிமையை த் திரும்பவும் தர

வேண்டுமென்று இறைஞ்சுகிறார். (யோ.17:1-5) அதன் பின்னர் அவரோடு கூட அமர்ந்திருந்த பன்னிரண்டு சீடர்களுக்காக மன்றாடுகிறார். (யோ.17:6-9) அவர்கள் உலகத்துக்குள்ளே அனுப்பப்படும்போது அவர்களோடே இருந்து, சத்தியத்தை எடுத்துச் சொல்ல அவர்களை பலப்படுத்த வேண்டும் என்று வேண்டிக் கொள்கிறார்.

தனக்காகவும், தன்னோடு உண்டு உறங்கி, தன்னோடு கூடப் பணியாற்றிய சீடர்களுக்காகவும் மன்றாடினதைப் புரிந்து கொள்ள முடிகிறது. ஆனால் மரணம் அவரைத் துரத்திக் கொண்டு வரும் அந்த பயங்கரமான சூழ்நிலையில் உனக்காகவும், எனக்காகவும் கவலைப்பட்டு மன்றாடுகிறாரே அது நமக்கு ஆச்சரியமாக இல்லையா? ஏன்அப்படி கவலைப்பட்டார்? அவர் நம்மீது கொண்டிருந்த் கரிசனையினால் அல்லவா? சொல்லப்போனால் அந்த அன்புதானே அவரைப் பூலோகத்துக்கு கொண்டு வந்தது. மரண பயம் ஒருவருடைய நெஞ்சை அழுத்திக் கொண்டிருக்கும் வேளையில் அவர் யாரைக் குறித்துக் கவலைப்படுவார்? தாம் நேசிக்கிற மனைவி பிள்ளைகள் நண்பர்களைத் தானே. ஆனால் நம்முடைய அருமை இரட்சகர், பாவிகளின் நண்பன், நாம் இன்னும் பாவிகளாக, தேவனுக்குச் சத்துருக்களாக இருந்த போதே அவர் நமக்காகக் கவலைப்படுகிறார். நண்பனே, அந்த மாசற்ற, தூய அன்புக்குக் கைமாறாக நாம் என்ன செய்கிறோம்? நேசிப்பதற்கு அருகதையற்ற நிலையில் பாவத்தில் உழன்று கொண்டிருந்த நம்மை நினைத்து மரிக்கும் தருவாயில் மறவாமல் மன்றாடி தம்முடைய அன்பை, கரிசனையை வெளிக்காட்டினாரே அதற்கு நானும் நீங்களும் என்ன செய்யப் போகிறோம்?

நம்மை நேசிக்கிற ஒருவர் மரிக்கும் தருவாயில் ஒரு காரியத்தை நம்மிடத்தில் வேண்டிக் கொள்கிறார் என்று வைத்துக் கொள்வோம். நன்றியுள்ளவர்களானால் அதை நிறைவேற்ற முயற்சிக்க வேண்டாமா? அவர் அவ்வளவு வேதனைக்கு மத்தியிலும் நம்மீது காட்டின பரிவை அலட்சியம் செய்வது சரியா? தயவு செய்து அவர் நமக்காக மன்றாடின காரியங்களைக் கவனியுங்கள். அந்த எளிய மேன்மாடியில் உள்ள மரணத்தோடு போராடிக் கொண்டிருக்கிற அந்த தேவாட்டுக் குட்டியின் வேதனை நிறைந்த மன்றாட்டை உற்றுக் கேளுங்கள்.

நான் இவர்களுக்காக வேண்டிக் கொள்வதுமல்லாமல் இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக் கொள்கிறேன். அவர்கள்

எல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறது போல அவர்கள் எல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும், வேண்டிக் கொள்கிறேன் என்கிறார். (யோவா.17:20-22)அதாவது அப்போஸ்தலர்களுடைய உபதேசத்தை ஏற்றுக் கொண்டு விசுவாசிகளான அனைத்து பேரும் ஒன்றாக இருக்க வேண்டும் என்று மன்றாடுகிறார். உலகத்தின் எந்த மூலை முடுக்குகளில் பட்டி, தொட்டிகளில் இயேசுவை இரட்சகராகஏற்றுக் கொண்ட மக்கள் இருக்கிறார்களோ அவர்கள் அனைவருக்குமே இது பொருந்தும்அவர் மன்றாடுகிற ஒருமைப்பாடு எப்படியிருக்க வேண்டும்? பல காலகட்டங்களில் வாழ்ந்த கிறிஸ்தவர்கள் இந்த ஒருமைப்பாட்டைச் செயல்படுத்த முயற்சிகள் மேற்கொண்டனர். சிலர், செயல், எண்ணம் ஆகியவைகள் ஒன்றாயிருக்கவேண்டும் என்றனர். வேறு சிலர், இயேசு இரட்சிக்கிறார். மற்றபடி அவரவர் வழிகளிலே நாம் நிற்போம் இதில் மட்டும் நாம் ஒரு மனம் உள்ளவர்களாக இருந்தால் போதும் என்றனர். வேறு சிலர் ஒருவருடைய விசுவாசமும் வாழ்க்கையும் எப்படியிருந்த போதிலும் மனிதகுலம் யாவும் படைப்பில் ஒன்று தான் என்றனர். இப்படி பல மாதிரியாக கருத்துக் கூறும் மனிதர்களை விட்டுவிட்டு, நாம் மறுபடியும் அந்த எளிய மேல்மாடிக்கு நேராக நம் கண்களை ஏறெடுத்து, காதுகளைத் தீட்டி, நம்முடைய அருமை இரட்சகர் இந்த ஒருமைப்பாடு எப்படிப்பட்டதாக இருக்கவேண்டும் என்று மன்றாடுகிறார் என்று கவனிப்போம்.

**நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறது போல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும்என்கிறாரே!** மறுபடியும் கவனமாய்க் கேளுங்கள்; அவரும் பிதாவும் எப்படி ஒன்றாயிருக்கிறார்களே அப்படி உலகெங்கிலும் உள்ள விசுவாசிகள் ஒன்றாயிருக்க வேண்டும் என்பது தான் அவர் மன்றாட்டு.தேவனும் இயேசுவும் எப்படி ஒன்றாயிருக்கிறார்கள். தேவனும் இயேசுவும் தெய்வீகத் தன்மையில் ஒன்றாக இருக்கிறார்கள். இயேசு பிதாவினுடைய சித்தத்துக்கு மாறாக எதையும் செய்யாமல், பிதாவினுடைய சித்தத்தை நிறைவேற்றவே வந்தேன் என்கிறார். தேவன் எதைப் பேசச் சொன்னாரோ அதையே பேசினார். சுருங்கக் கூறின் இயேசுவின் உணவே பிதாவினுடைய சித்தத்தை நிறைவேற்றுவது தான் என்கிறார் (யோ.4:34) தேவன், என்ன செய்யப்பட வேண்டும் என்று விரும்பினாரோ அதை நிறைவேற்றி வைப்பதுதான் இயேசுவின் பணி. யெகோவா தேவன் எதைச்

சொன்னாரோ அதையே இயேசுவும் சொல்கிறார். யெகோவா என்ன நினைக்கிறாரோ அதையே இயேசுவும் நினைக்கிறார். அவர்கள் இருவரும் வாக்கிலும், சிந்தனையிலும், செயலிலும் ஒரே சிந்தையுள்ளவர்களாக இருக்கிறார்கள். அவர்களுள் எவ்வித வேறுபாடும் இல்லை. இதை **தேவத்துவத்தின் பரிபூரண மெல்லாம் சரீரப் பிரகாரமாக அவருக்குள் வாசமாயிருக்கிறது**என்று வர்ணிக்கிறார் பவுல் (கொலோ.2:9)

மேல் அறையில் இயேசு ஜெபித்த உருக்கமான ஜெபத்துக்கும் தற்காலத்தில் வாழுகின்ற கிறிஸ்தவ மக்களிடையே காணப்படுகிற ஒற்றுமையின்மை மற்றும் முரண்பாடுகளுக்கும் உள்ள வித்தியாசத்தைக் கவனியுங்கள்: தம்மைப் போலவும், பிதாவைப் போலவும் ஒன்றாக இருக்க விசுவாசிகள் அனைவருக்கும் ஒத்தாசை செய்ய வேண்டும் என்று மரணத்தைச் சந்தித்த வேளையிலும் பிதாவிடம் மன்றாடினார். ஆனால் இங்கே விசுவாசிகள் பல கூறுகளாகப் பிரிந்து ஒருவருக்கொருவர் இணக்கமில்லாமல் செயல்படுவதோடு மட்டுமில்லாமல் முரண்பாடாகவும் செயல்படுகின்ற கொடுமையை நாம் கண்கூடாகக் காண்கிறோம். அவருடைய உருக்கமான ஜெபம் கேட்கப்படாமலும், அவருடைய மரண வாக்குமூலம் மதிக்கப்படாமலும் இருக்கிற நிலையைக் காணும் ஒரு உண்மை கிறிஸ்தவன் துக்கப்படாமல் இருக்கமுடியாது.

அந்த ஒருமைப்பாட்டை அவ்வளவு வலியுறுத்தி உருக்கத்தோடு மன்றாடின காரணத்தை அவர் வாய்மொழியாகவே கேளுங்கள். ***அவரை விசுவாசிக்கிற அனைவரும் ஒன்றாக இருந்தால்தான் பிதா அவரை அனுப்பினார் என்றும், அவரே தானாக வந்து தனக்கு ஒரு உயர்ந்த நிலையைத் தேடவில்லை என்றும், உலகமக்கள் நம்புவர் என்கிறார். ஆம், சகோதரர்களே, இது உண்மை.*** அனைத்து விசுவாசிகளும் ஒன்றாக இருந்தால் தான் உலக மக்கள் இயேசு கிறிஸ்துவை உலக இரட்சகராக ஏற்றுக்கொள்ள ஏதுவுண்டாகும். இப்பொழுது காண்கிற நிலை முற்றிலும் மாறுபாடாக இருக்கிறது. கிறிஸ்துவை விசுவாசிக்கிற ஒரு கூட்டத்தார் மற்றொரு கூட்டத்தாரை இகழ்ந்தும், பழித்துக் கூறியும் விரோதிகளைப் போல் நடந்து கொள்கிறோமே. விசுவாசிகளிடம் காணப்படுகிற இந்த இழிநிலைக்கு நாம் செலுத்தி வருகிற அபராதம் மிக மிக அதிகம். ஆம்,பல கோடி ஆத்துமாக்கள்ஒரு ஆத்துமாவே உலகத்திலுள்ள அனைத்தை காட்டிலும் விலையுயர்ந்தது என்று வேதம் குறிப்பிடுகிறது. நம்முடைய பிரிவினை வாதமோ பலகோடி மக்கள்

கிறிஸ்துவை உலக இரட்சகராக ஏற்றுக்கொள்ளத் தடையாயிருக்கிறது. ஏனெனில் நம்முடைய ஒற்றுமையின்மை உலகறிந்த உண்மை. நாங்களும் கிறிஸ்துவைத் தான் பின்பற்றுகிறோம் என்று வாயினால் சொல்லுகிறார்கள். ஆனால் தங்கள் செயல்களால் மறுதலிக்கிறார்கள். உலகம் இதை உற்றுக்கவனித்துவிட்டு சொல்லுக்கும் செயலுக்கும் சம்பந்தமில்லாத கிறிஸ்தவம் எங்களுக்கு வேண்டாம் என்று ஒதுங்கி ஓடுகிறார்கள்.

நான் சந்தித்துப் பேசும் வாய்ப்புப் பெற்ற அநேகமாயிரம் மக்கள் கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளாததற்காக பல காரணங்களைச் சொன்னாலும், கிறிஸ்தவர்களுடைய ஒற்றுமையின்மை, முரண்பாடானஉபதேசங்கள் போன்ற காரணங்களைச் சாக்காக சொல்பவர்களே மிக மிக அதிகம். எனக்கு மிகவும் கவலை தரும் விஷயம் என்னவென்றால் எத்தனையோ காரணங்கள் இருந்தாலும் ***பிரிவினை வாதம் தான் கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று உலகம் ஏற்றுக் கொள்ளாததற்கு பெருந்தடையாக இருக்கிறது என்பதுதான்.*** ஆனால் என்ன ஆச்சரியம் அப்படிப்பட்ட பயங்கர விளைகவுளை உண்டாக்குகிற பிரிவினை வாதத்தைப்போதிக்கிற போதகர்கள் கணிசமான மக்கள் கூட்டத்தை தங்கள் நயவசனிப்பினாலும், இச்சகப் பேச்சினாலும் வஞ்சித்து கிறிஸ்துவின் சரீரமாகிய சபையைக் கூறு போட்டு பிழைப்பு நடத்திக்கொண்டிருக்கிறார்கள். இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிற நாம் எல்லோரும் அவரை உண்மையாகவே நேசிக்கிறதாக இருந்தால் இந்த இழிநிலையைக் களைந்தெறிவதற்கு முயற்சி செய்ய வேண்டாமா? சாவு நிச்சயம் என்று திட்டவட்டமாக அறிந்த கர்த்தர், கடைசி நிமிஷத்தில் முகம்குப்புற விழுந்து, பிதாவே, நீரும் நானும் ஒன்றாயிருப்பது போல என்னை விசுவாசிக்கிற அனைவரும் ஒன்றாக இருக்க வேண்டும் என்று மன்றாடி ஜெபித்ததை நாம் ஒரு கணம் சிந்தித்துப் பார்த்தோமானால் இந்தப் பிரிவினை வாதத்தை எதிர்த்துப்போராடமலிப்போமா!

ஒரு வேளை இந்த ஐக்கியம் சாத்தியமில்லை என்று நினைக்கிறோமா? அப்படி நினைக்கலாகாது. ஒரு நல்ல கிறிஸ்தவன் ஒரு விஷயத்தை அணுகும்போது அவனுடைய அனுபவத்தையே அடிப்படையாக எடுத்துக் கொள்ளவேண்டும். மாவீரன் கோலியாத்தை வீழ்த்திய சிறு தாவீதை எண்ணிப் பாருங்கள்.

## நாம் மறுபடியும் ஒன்றாயிருப்பது சாத்தியமே:

விசுவாசிகள் ஒன்றாக இருக்க வேண்டும் என்பது தேவசித்தம் இயேசு அதற்காக ஜெபித்தார். ஆகவே அது நிச்சயம் நடக்கும். தேவன் செயல்படுத்த முடியாத ஒன்றைக் குறித்து கட்டளை கொடுப்பார் என்றால் சிலுவை விருதாவாகி விடுமே! நாம் இரட்சிக்கப்படும்படி தேவன் தம்முடைய ஒரே பேரான குமாரனை சிலுவையில் மரிக்க அனுமதித்துவிட்டு, கடைப்பிடிக்க முடியாத ஒன்றைக் கட்டளையாகக் கொடுப்பாரானால் அவர் நோக்கத்தை அவரே தகர்த்தெறிகிறார். அதாவது சிலுவையை விருதாவாக்குறார் என்றல்லவா பொருள்படும்.

மனிதனுக்கு ஏற்படுகிற அனைத்துப் பிரச்சினைகளுக்கும் வேதாகமத்தில் தீர்வு உண்டு. அப்படியானால் கிறிஸ்து மன்றாடி ஜெபித்த ஒருமைப்பாடு சீர்குலைந்து கிடப்பதையும் சரி செய்ய வழி இருக்குமே! பிரிவினை வாதம் இன்று நேற்று முளைத்த பிரச்சனை அல்ல . இது ஒரு பழைய நோய். முதல் நூற்றாண்டின் மத்தியில் கிரேக்கப் பேரரசின் ஒரு பகுதியாகிய கொரிந்து பட்டணத்தில் பவுல்அப்போஸ்தலன் சுமார் இரண்டு ஆண்டுகள் தங்கி தூய, எளிய சுவிசேஷத்தைப் பிரகடனம் பண்ணினார். அதைக் கேட்டு விசுவாசித்த பல கொரிந்தியர்கள் திருமுழுக்குப் பெற்றுக்கொண்டனர் *(அப்.18:8)*இவ்விதமாய் அங்கே ஓர் கிறிஸ்துவின் சபை ஆரம்பிக்கப்பட்டது. சில காலத்திற்குப் பிறகு பவுல் அப்போஸ்தலன் வேறு இடத்துக்கு சுவிசேஷம் அறிவிக்கச் சென்று விட்டார். கொஞ்ச நாட்கள் கழிந்தன. அங்கே கொஞ்சம் குழப்பம் என்று பவுலடியாருக்கு தகவல்வந்தது. அவைகளில் பிரதானமானது பிரிவினை. அவர்கள் ஒன்றாயிருந்த சபையைப்பிளந்து கூறுபோட்டு ஒவ்வொரு கூறுக்கும் ஒரு பெரிய புள்ளியின் பெயரைச்சூட்டி, நான் அவரைச் சார்ந்தவன், நான் இவரைச் சார்ந்தவன் என்று பிரிந்து செயல்பட்டனர் *(1கொரி.1:10)*இதைக் கேட்டு மனமுடைந்த பவுலடியார் அவர்களுக்கு ஒரு அறிவுரைக் கடிதம் எழுதினார். இங்கே கவனிக்க வேண்டிய விஷயம் என்னவென்றால் பவுல் அந்தப் பிரிவினையை அங்கீகரிக்கவில்லை. மாறாகக் கண்டித்தார், கொஞ்சம் மனவேறுபாடு இருந்தால் பிரிந்து செயல்படுவது ஒன்றும் தவறில்லை என்ற மாதிரி பூசிமொழுகவில்லை. பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலினால் மனதைஉருக்கக்கூடிய வார்த்தைகளைப் உபயோகித்து எழுதினதாவது; நீங்கள் எல்லாரும் ஒரே காரியத்தை பேசவேண்டும் என்று புத்தி சொல்லுகிறேன் என்கிறார் *(1கொரி.1:10)* ஆனால்

இன்றைக்குச் சில பேர் எல்லோரும் ஒரே காரியத்தைப் பேசுவது கூடாத காரியம் என்று வாதிடுகின்றனர். நாம் எல்லோரும் ஒன்றாயிருப்பதும் ஆகக்கூடிய காரியம் அல்ல என்கின்றனர். அன்றைய உலகின் பெரிய நகரங்களில் ஒன்று என்று கருதப்பட்டதும் அநேகமாயிரம் விசுவாசிகளைக் கொண்டதுமான அந்த சபைக்கு (அந்த சபையில் சுமார் 60,000 அங்கத்தினர்கள் இருந்திருப்பார்கள் என்று நம்பப்படுகிறது) நீங்கள் நேசிக்கிற, நீங்கள் பின்பற்றுகிற இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே கட்டளையிட்டுச் சொல்லுகிறதாவது! நீங்கள் ஒரே காரியத்தைப் பேசவும்,பிரிவினையில்லாமல் ஏகமனதும், ஏகயோசனையுமுள்ளவர்களாக சீர் பொருந்தியிருக்கவும் வேண்டும் என்று வேண்டிக் கொள்கிறேன் என்கிறார். இது மனுஷருடைய ஆலோசனையில்லை பரிசுத்த ஆவியானவரின் கட்டளை.

ஆனால் கொரிந்து பட்டணத்து சபை பல கூறுகளாகப் பிரிந்து நின்று செயல்பட்டது. புதியவர் ஒருவர் கொரிந்து பட்டணத்துக்குப் போகிறார் என்று வைத்துக் கொள்வோம் அவர் அங்குள்ள ஒரு விசுவாசியைப் பார்த்து நீங்கள், ஒரு விசுவாசியா? அதற்கு ஆம் என்று பதில் வந்தால் மீண்டும் ஒரு கேள்வி தொடரும்; நீங்கள் யாரைப்பின்பற்றுகிற விசுவாசி? அதற்கு அவர் தான் அப்பொல்லோவைச் சேர்ந்தவன் அல்லது கேபாவைச் சேர்ந்தவன் அல்லது பவுலைச் சேர்ந்தவன் என்றே பதில் வரும்.

பவுலடியார் இந்த நிலைமையைக் கேட்டு கொரிந்து சபையாரைக் கடிந்துகொண்டு, கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா? பவுலா உங்களுக்காகச் சிலுவையில் மரித்தார்? பவுல் பெயராலா ஞானாஸ்நானம் பெற்றீர்கள்? என்று சாடுகிறார். பவுல் ஏன் அவ்வளவு கடுமையாக பிரிவினைவாதிகளைக் கடிந்து கொள்கிறார்? ஒருமைப்பாட்டை உருவாக்க முடியாது என்று நினைத்துக் கொண்டு அவர்களைக் குறை கூறாமல் விட்டிருக்கலாமே. ஏன் அப்படி விடவில்லை? அவர்களுடைய பின்னணி வித்தியாசமானது அவர்கள் சிந்தனையோட்டம் வித்தியாசமானது. ஆகவே அவரவர் விருப்பப்படி விசுவாசிகள் இருந்துவிட்டுப் போகட்டும் என்று அவர் ஏன் விட்டுவிடவில்லை?

பவுல் பிரிவினையைக் கண்டிப்பதற்கு ஏவப்பட்டதற்கான காரணத்தை விளக்குகிறார்.

*நீங்கள் இன்னும் மாம்ச சிந்தையுள்ளவர்களாக இருக்கிறீர்கள் (1கொரி.3:3)* மாம்ச சிந்தை என்றால் உலகியல் கோட்பாடு .

அதாவதுஉலகுக்கு அடுத்த காரியங்களில் நாட்டம். ஆவிக்குரிய சிந்தனைக்கு விரோதமான போக்கு. கொரிந்து சபையில் உள்ள விசுவாசிகள் மாமிச சிந்தையுடையவர்கள். தேவநீதிக்குப் பயப்பட்டு நடக்கிறவர்கள் அல்ல, அவர்களுக்குள்ளே பொறாமையும், விரோதங்களும் பிரிவினைகளும், காணப்பட்டது.(1கொரி. 3:3-6) ஒருவன் நான் பவுலைச் சேர்ந்தவன் என்கிறான். இன்னொருவன் நான் அப்பொல்லோவைச் சேர்ந்தவன் என்கிறான். எங்கே விசுவாசிகள் தங்களை வித்தியாசமான பெயர்களால் அழைத்துக்கொண்டு நாங்கள் கிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்கள் என்று சொல்லுகிறார்களோஅங்கே ஆவியின் சிந்தையோ நீதியோ இருக்க முடியாது. மாம்ச சிந்தை, ஈடுபாடுகள் இவைகள் தான் இருக்கும்.

கர்த்தரை விசுவாசிக்கிற மக்கள் பவுல் அப்போஸ்தலன் மூலமாய் பேசுகிற பரிசுத்த ஆவிக்குச் செவி கொடுக்க வேண்டும். இரண்டு விசுவாசிகளோ அல்லது இரண்டு லட்சம் விசுவாசிகளோ எண்ணிக்கையைப்பற்றிக் கவலையில்லை. அவர்கள் மத்தியில் பிரிவினை காணப்பட்டால் அங்கே பாவம் சம்பந்தபட்டிருக்கிறது.அங்கே மாமிச சிந்தை ஆதிக்கம் செலுத்துகிறது. பாவம் ஒருவர் மீதோ அல்லது அவரை எதிர்க்கிற இன்னொருவர் மீதோ இருக்கலாம் அல்லது இருவர் பேரிலும் கூட இருக்கலாம். ஆனால் பாவம் இருப்பது நிச்சயம்.

## இந்த பாவத்தை அகற்ற நாம் என்ன செய்ய வேண்டும்?

விசுவாசிகளுக்கிடையே பிரிவினை ஏற்படுவதற்கு மூலகாரணம் எழுதப்பட்டதற்கு மிஞ்சி எண்ணுவதாகும். ஆகையால் பிரிவினை நோய் அகற்றப்பட்ட வேண்டுமானால் வேதாகமத்தில் பரிசுத்த மனிதர்கள் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு எழுதி வைத்திருக்கிற உபதேசச் சட்டங்களுக்கு மிஞ்சி மாந்த அறிவைக் கலப்படம் செய்துவிடாமல் விழிப்பாக இருக்கவேண்டும். கொரிந்து சபையில் விசேஷித்த வரம் பெற்ற விசுவாசிகள் கூட இருந்திருப்பதாகத் தெரிகிறது. அவர்கள் கூட சபைக்கு ஏதாவது செய்தி சொல்லுவார்களானால் அது எழுதப்பட்டிருக்கிற வார்த்தைக்கு இசைவாக இருக்கிறதா என்று சோதித்துப் பார்க்க வேண்டும் என்கிறார். தற்காலத்தில் அநேக பிரசங்கிமார்கள் எழும்பி நான் வரம் பெற்றவன். பரிசுத்த ஆவியானவரோடு எனக்கு நேரடித் தொடர்பு இருக்கிறது. அவர் எனக்கு அவ்வப்பொழுது காரியங்களை வெளிப்படுத்துகிறார் என்றும் இன்னும் கற்பனை செய்து பார்க்க முடியாத சங்கதிகளையும், உபதேசங்களையும் முன்னுக்குப் பின்முரணாகச் சொல்லுகிறார்கள். அவர்கள் தங்கள் கூற்றை மெய்ப்பிப்பதற்காக சில அற்புத

அடையாளங்களையும் செய்வதாக விளம்பரப்படுத்துகிறார்கள். இது ஆவியானவருடைய அங்கீகாரம் பெற்றதா? விசுவாசிகளெல்லாம் ஒன்றாக இருக்க வேண்டுமென உருக்கமாய் வேண்டிக் கொண்ட ஆவியானவர் இப்படி ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமாக காரியங்களை வெளிப்டுத்திக் கொண்டிருப்பாரா? அப்படியானால் வெளி.22.18,19ன் பொருள் என்ன? கூட்டவும் கூடாது,குறைக்கவும் கூடாது என்கிறாரே. யாக்கோபு பூரணப்பிரமாணம் என்கிறாரே: யாக் 1:25 ஒருவன் எவ்வளவு பெரிய மனிதனாக -வானத்திலிருந்து வந்த தூதனாக இருந்தாலும் சரி, வித்தியாசமான போதனைகளைக் கொண்டு வருவானானால் அதை ஏற்றுக்கொள்ளகூடாது என்று அப்போஸ்தலன் பவுலும் யோவானும் நம்மை எச்சரிக்கிறதைக் கேளுங்கள். (கலா 1:6 -9:1 யோவான் 9:11).


நாம் எழுதப்பட்டிருக்கிற வார்த்தையின்படி நடந்தால் ஒருவருக்கொருவர் பெருமை பாராட்டமாட்டோம். இது ஓர் அற்புதமான உண்மை. நம் அனைவருக்கும் வேதம் கூறுகிற அறிவுரை, பவுலும், அப்பொல்லோவும் இதற்கு சிறந்த முன் மாதிரிகள். எங்களைப் பார்த்துக் கற்றுக்கொள்ளுங்கள் என்கிறார் பவுல். (1கொரி.4:6) நானும் நீங்களும் இயேசுவின் மேல் விசுவாசமுள்ளவர்களாய் இருந்தால் நாமும் அதைப்பின்பற்றுவோம். எழுதப்பட்டிருக்கிற சத்தியத்தை தெளிந்த மனதோடு வாசித்து, நம்முடைய பாரம்பரியமோ, சுற்றுப்புற சூழல்களோ நம்மை மோசம் போக்கிவிட அனுமதியாமல் ஒரே காரியத்தை நம்புவோம். ஒரே காரியத்தை பேசுவோம். ஏனெனில் சுவிசேஷமே இரட்சிப்புக்கு ஒரே தேவ பெலனாயிருக்கிறது. அது, முதல் நூற்றாண்டில் அநேக ஆத்துமாக்களை இரட்சித்து அன்றைய நாகரீக உலகம் அனைத்திலும் பரவிக் கிரியை செய்தது என்றால் இன்றைக்கு மட்டும் ஏன் முடியாது? புதிய வெளிப்பாட்டுக்கும் விதவிதமான கொள்கைக் குழப்பங்களுக்கும் அவசியம் ஏன்? சிந்திப்பீர்! இரட்சிப்பு சம்பந்தபட்ட விசயத்தில் நாம் வேதாகமம் ஒன்றையே பின்பற்ற வேண்டும். எழுதப்பட்டிருக்கிற வசனத்தின் வெளிச்சத்தில் நாம்நடந்தால் வேற்றுமைக்கு இடம் ஏது? அதைத் தானே பேதுருவும் வற்புறுத்துகிறார். **ஒருவன் போதித்தால் வேத வாக்கியங்களின்படி போதிக்கக் கடவன்** (1பேது.4:11) ஆகவே நண்பர்களே! மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதிப்பவர்களை நிராகரித்து விட்டு வேதாகமம் பேசுகிற இடத்திலே பேசுவோம். வேதாகமம் மௌனமாக இருக்கிற இடத்திலே நாமும் மௌனமாக இருப்போம். அதுவே ஒற்றுமைக்கு ஒரே வழி.

<u>நிறுவன ஆசிரியர்:</u> **E.Z. செல்வநாயகம்**

---

**திருமறை ஆசான்** இதழின் நிறுவன ஆசிரியர் **E.Z.** செல்வநாயகம் அவர்கள் பரம இளைப்பாறுதலுக்குள் பிரவேசித்து 9.2.2000-உடன் ஏழு ஆண்டுகள் நிறைவு பெறுவதை யொட்டி அவர் நினைவாக இக்கட்டுரை வெளியிடப்படுகிறது.

ஆசிரியர்.



# மன்னிப்பது எப்படி

நம்முடைய தொடர்பாடத்தின் ஒட்டுமொத்த கருத்தாகிய, **நீங்கள் இருக்குமிடத்தில் கர்த்தருடைய சபையைத் தொடங்குவது எப்படி?** என்ற தலைப்பின் கீழாக, நாம் தொடர்ந்து படிக்க உள்ளோம். இத்தொடர் பாடத்தின் விளைவாக; அநேக புதிய இடங்களில் கர்த்தருடைய சபையின் ஆரம்பம் இருக்கவேண்டுமென்று ஜெபிக்கிறேன். இக்காரியத்தில் நீங்கள் எனக்கு உதவி செய்ய முடியும். நான் ஏற்கனவே பலமுறை குறிப்பிட்டுள்ளதைப் போல, நீங்கள் இக்காரியத்தில் கர்த்தருக்குக் கீழ்ப்படியும்வரை உங்களால் உதவமுடியாது. கர்த்தருக்குக் கீழ்ப்படிவது ஒரு கடினமான காரியமல்ல. இந்த தொடர் கட்டுரையை நீங்கள் கவனித்திருந்தால், சுவிசேஷம் சொல்லும் இரட்சிப்பின் திட்டம் குறித்து நான் அநேக முறை பேசியிருப்பது உங்களுக்குத் தெரியும். கர்த்தர், நீங்கள் விசுவாசித்து (மாற்கு16:16) உங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்ப வேண்டுமென்றும் (2.பேதுரு3:9) இயேசுவை தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட வேண்டுமென்றும் (மத்.10:32) பிறகு உங்கள் பாவங்களிலிருந்து கழுவப்பட ஞானஸ்நானம் பெறவேண்டுமென்றும் (அப்.2:38) சொல்லியுள்ளதை நான் குறிப்பிட்டிருக்கின்றேன். இப்பொழுது நீங்கள் அப்படிச் செய்தால், கர்த்தர் உங்களை இரட்சித்து அவருடைய சபையில் சேர்த்துக் கொள்வார். (அப்.2:47). அந்நிலையில், ஒரு கிறிஸ்தவனாக, சபையின் ஒரு அங்கத்தினராக, வாரத்தின் முதல்நாள் தோறும் கர்த்தரை ஆராதித்து, கர்த்தருடைய வேலையில் உதவியாயிருக்க முடியும். ஒரு கிறிஸ்தவன் என்ற அந்தஸ்த்தில், நீங்கள் இருக்குமிடத்தில், ஏற்கனவே ஒரு சபை இல்லாதிருப்பின், ஒரு சபையை ஆரம்பிப்பதற்கான முயற்சியை நீங்கள் எடுக்கமுடியும். நீங்கள் அப்படிச் செய்வீர்கள் என்று நம்புகிறேன்.

நீங்கள் இப்பொழுது ஏற்கனவே கர்த்தருடைய சபையில் அங்கத்தினராக இருந்தால், நீங்கள் மேலும் காரியங்களைத் தெரிந்து கொள்ள விரும்புகிறீர்கள், அப்படித்தானே? ஏற்கனவே அங்கு சபை இருந்தால், அது நல்லது. அந்நிலையில் நீங்கள், அப்பிராந்திய

சபையின் வளர்ச்சிக்கும், கர்த்தருடைய உபதேசம் பரம்புவதற்கும் உதவியாக இருக்கும்படி உங்களை ஊக்கப்படுத்துகிறேன். ஆனால், ஏதாவது ஒரு காரணத்தால், நீங்கள் ஒரு பட்டணத்திலோ அல்லது ஒரு கிராமத்திலோ, அல்லது வேறு எங்காகிலுமோ இருக்க நேர்ந்து, அங்கு கர்த்தருடைய சபை இல்லாமலிருந்தால், மீண்டுமாக ஒன்றை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். கிறிஸ்துவையும், அவருடைய சத்தியத்தையும் எடுத்துரைப்பதற்கு அங்கே நீங்கள்தான் உள்ளீர்கள். அவ்விடத்தில் அவருடைய சபை ஸ்தாபிக்கப்படும்படியாக, உபதேசிப்பதற்கும், மக்களை மனமாற்றத்திற்குள்ளாக வழிநடத்துவதற்கும் கிறிஸ்து உங்களைத்தான் நோக்கிப்பார்க்கிறார். என்னால் முடியாது என்று தயவு செய்து சொல்லாதீர்கள். உங்களால் முடியும். உங்களால் இது சம்பந்தமாக என்ன செய்யமுடிந்ததென்பதற்கான நல்ல செய்திகள்ள சீக்கிரத்தில் உங்களிடமிருந்து கேட்க ஆசையாயிருக்கிறோம். சரிதானே?

இப்பொழுது, நமது தொடரின் முக்கியப் பாடமான, மன்னிப்பது எப்படி? என்பது குறித்து நாம் பார்க்க உள்ளோம்.

பாவிகளாகிய நாம் இரட்சிப்படைவதற்கு நம்முடைய பாவங்களை இரட்சிக்கும்படியான அவசியம் கர்த்தருக்கு உண்டாயிற்று. அப்படிச் செய்வதற்கு, அவர் தம்மையே சிலுவையில் தியாகம் செய்தார். அதற்காக நாம் தேவனுக்கு நன்றி சொல்லுகிறோம். அப்படித்தானே? ஆனால் கர்த்தர் நம்முடைய கடந்த காலப் பாவங்களிலிருந்தெல்லாம் நம்மை மன்னித்திருந்தும், நாம் மனிதர்களாயிருப்பதால், மீண்டும் பாவம் செய்கிறோம். ஆகையால், நமக்கு மன்னிப்பு தொடர்ந்து அவசியமாகிறது. அப்படிப்போலவே, நமக்கு விரோதமாகப் பாவம் செய்கிறவர்களுக்கு, மன்னிக்க நாம் ஆயத்தமுள்ளவர்களாயிருக்கவேண்டும். ***இக்காரியத்தை எப்படிச் செய்வதென்று நாம் கற்று, அதன்படி செய்வதற்கு நாம் விருப்பமுடையவர்களாயிராவிட்டால், நாம் நம்முடைய பாவங்களிலிருந்து மன்னிக்கப்படமாட்டோம்.*** இதிலிருந்து, இது எவ்வளவு முக்கியமானதென்று நீங்கள் தெரிந்து கொள்ள முடியும். இயேசு தம் சீஷர்களுக்கு இவ்விதம் கற்றுக்கொடுத்தார். **எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்** *(மத்.6:12)* தொடர்ந்து இயேசுவானவர் ***மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னித்தால், உங்கள் பரமபிதா உங்களுக்கும் மன்னிப்பார். மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னியாதிருந்தால், உங்கள் பிதா உங்களுக்கும் மன்னியாதிருப்பார்.*** *(மத்.6:14,15)*

நம்முடைய பாவங்களை கர்த்தர் மன்னிக்கும்படியாக நாம் எதிர்பார்த்துக்கொண்டு, நமக்கு விரோதமாக மற்றவர்கள் செய்யும் தவறை மன்னிக்க மனமில்லாமலிருப்பது ஆச்சரியமாக இல்லையா? நாம் மன்னிக்க மறுப்போமானால், அவரும் நம்மை மன்னிக்கமாட்டார் என்ற உண்மையை நாம் அறிந்து கொள்ளவேண்டுமென கர்த்தர் சொல்லுகிறார். ***ஆகையால், நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்பட நாம் கர்த்தரை எதிர்பார்த்தால், நமக்கு விரோதமான பாவங்களை நாம் மன்னிக்க வேண்டும்.*** இது மிகச் சுலபமானது. அது ஒன்றும் பெரிய காரியமில்லைதானே? மன்னிப்பு ஒரு வழியானதாக இருக்கக்கூடாது. எல்லா மன்னிப்பையும் கர்த்தர் மாத்திரமே செய்துகொண்டிருக்க வேண்டுமென நாம் எதிர்பார்க்கக் கூடாது. நாமும் அப்படிச் செய்ய வேண்டும்.

அப்போஸ்தலன் பவுல் ஒருவருக்கொருவர் **தயவாயும் மன உருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்ததுபோல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்** என்று கூறியுள்ளார். (எபே.4:32) மீண்டுமவர், ஆகையால் நீங்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட பரிசுத்தரும் பிரியருமாய், உருக்கமான இரக்கத்தையும், தயவையும், மனத்தாழ்மையையும், சாந்தத்தையும், நீடிய பொறுமையையும் தரித்துக்கொண்டு, ஒருவரையொருவர் தாங்கி, ஒருவர் பேரில் ஒருவருக்குக் குறைபாடு உண்டானால், கிறிஸ்து உங்களுக்கு மன்னித்தது போல, ஒருவருக்கொருவர் மன்னியுங்கள். (கொலோ.3:12,13) என்கிறார், ஆகையால், நமக்கு விரோதமாக ஒருவர் பாவஞ் செய்து, அதற்காக நம்மிடத்தில் மன்னிப்புக் கோரினால், நாம் அவர்களுக்கு மன்னிக்க வேண்டுமென்று மிகத் தெளிவாகத் தெரிகிறது. ஒருவேளை அவர்கள் அப்படி கேட்காவிட்டால் கூட, கண்டிப்பாக, அவர்களுக்கு விரோதமாக மனஸ்தாபம் கொள்ளக்கூடாது.

இப்பொழுது நாம், தேவனுக்கு விரோதமாகவும், சக மனிதனுக்கு விரோதமாகவும் பாவம் செய்திருந்தால், நாம் என்ன செய்யவேண்டும்? நாம் எப்படி மன்னிப்பு பெற்றுக்கொள்ளமுடியும்? நாம் தனிப்பட்ட அளவிலும், வெளியில் தெரியாமலும் பாவம் செய்திருந்தால், அதாவது அந்தப் பாவத்தை நாமும் தேவனும் மாத்திரம் அறிந்திருந்தால், நாம் அந்தப் பாவத்திற்காக மனந்திரும்பி, தேவனிடத்தில் மன்னிப்பு கேட்கவேண்டும். இவ்விஷயத்தில் இதற்கு மேல் ஒன்றும் செய்யத் தேவையில்லை.

ஆனால், நாம் ஒரு மனிதனுக்கு விரோதமாகப் பாவம் செய்திருந்தால் அல்லது அவனுக்கு விரோதமாக ஏதாவது காரியம் செய்திருந்தால், பிறகு நாம் அவனிடத்தில் சென்று, நாங்கள் செய்தவைகளுக்காக வருந்துகிறோம் என்று சொல்லி, மன்னிப்பு கேட்கவேண்டும். அது அப்பிரச்சினையின் முடிவாக இருக்கட்டும். இன்னும், நாம் வெளிப்படையாகப் பாவம் செய்து, அதன் மூலம் கர்த்தருக்கும், அவருடைய சபைக்கும் அவமானத்தைக் கொண்டு வந்திருப்போமானால் நாம் சபைக்கு முன்பாகச் சென்று, நம்முடைய பாவத்திலிருந்து மனந்திரும்பி, நம்முடைய தவற்றை வெளிப்படையாக அறிக்கையிட்டு, நம்மையும், நம்முடைய பாவங்களையும் கர்த்தரும், நம்முடைய சகோதரர்களும் மன்னிக்கக்கேட்கவேண்டும். அப்போஸ்தலர் எட்டாம் அதிகாரத்தில், மாயவித்தைக்காரனாகிய சீமோன், தான் இரட்சிக்கப்படும்படியாக கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து, சபையின் அங்கத்தினரானான். ஆனால், பேதுருவாலும், யோவானாலும் சில சமாரியக் கிறிஸ்தவர்களுக்கு பரிசுத்த ஆவியானவரின் வல்லமை தந்தருளப்படுகிறதைக் கண்டு, அந்த வல்லமையை பணத்தினாலே பெற்றுக்கொள்ளும்படி சோதிக்கப்பட்டான். இதுகுறித்து வேத வசனம் இவ்விதம் சொல்லுகிறது. பேதுரு அவனை நோக்கி: தேவனுடைய வரத்தைப் பணத்தினாலே சம்பாதித்துக் கொள்ளலாமென்று நீ நினைத்த படியால் உன் பாவம் உன்னோடே கூட நாசமாய்ப் போகக் கடவது. உன் இருதயம் தேவனுக்குமுன்பாகச் செம்மையாயிராதபடியால், இந்த விஷயத்திலே உனக்குப் பங்குமில்லை பாகமுமில்லை. ஆகையால், நீ உன் துர்க்குணத்தை விட்டு மனந்திரும்பி, தேவனை நோக்கி வேண்டிக்கொள்; ஒரு வேளை உன் இருதயத்தின் எண்ணம் உனக்கு மன்னிக்கப்படலாம். நீ கசப்பான பிச்சிலும் பாவக்கட்டிலும் அகப்பட்டிருக்கிறதாகக் காண்கிறேன் என்றான். அதற்குச் சீமோன், நீங்கள் சொன்ன காரியங்களில் ஒன்றும் எனக்கு நேரிடாதபடிக்கு, எனக்காக கர்த்தரை வேண்டிக்கொள்ளுங்கள் என்றான். *(அப்.8:20-24)*. ஆகையால் சீமோன் மனந்திரும்பி குணப்பட்டான். ஆனால், அவன் பரிசுத்த ஆவியின் வல்லமையை தவறாகப் பயன்படுத்த சோதிக்கப்படாதபடி, அவ்வல்லமை அவனுக்கு கொடுக்கப்பட்டதற்கான அறிகுறி இல்லை.

கெட்ட குமாரன் கதை என்று பொதுவாக அழைக்கப்படுகின்ற வேறொரு சம்பவமும் நமக்கு வேதாமகத்தில் உண்டு. தகப்பனோடிருந்த அந்த இளையகுமாரன், எல்லாம் தனக்கிருந்தும்,

தனக்குச் சேரவேண்டிய பங்கை எடுத்துக் கொண்டு, தகப்பனை விட்டுப் போகமுடிவு செய்துவிட்டான். அவன், அவ்விதமாகவே செய்து, தன்னுடையஆஸ்தி முழுவதையும் தவறான வழிகளில் செலவழித்துத் தீர்த்தான். பிறகு, தன்னிடத்தில் எதுவுமே இல்லையென்ற நிலை ஏற்பட்டு, பசிக்கொடுமையிலிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ளும்படி, தனக்கு எவ்வகையிலும் ஒவ்வாத பன்றி மேய்க்கும் வேலையைச் செய்ய வேண்டியதாயிற்று. பரிசுத்த வேதாகமம் இது குறித்து, **அவனுக்குப் புத்தி தெளிந்தபோது, அவன்: என் தகப்பனுடைய கூலிக்காரர் எத்தனையோ பேருக்குப் பூர்த்தியான சாப்பாடு இருக்கிறது, நானோ பசியினால் சாகிறேன். நான் எழுந்து, என் தகப்பனிடத்தில், உம்முடைய கூலிக்காரரில் ஒருவனாக என்னை வைத்துக்கொள்ளும் என்பேன் என்று சொல்லி; எழுந்து புறப்பட்டு, தன் தகப்பனிடத்தில் வந்தான்.** அவன் தூரத்தில் வரும்போதே, அவனுடைய தகப்பன் அவனைக் கண்டு, மனதுருகி, ஓடி அவன் கழுத்தைக் கட்டிக்கொண்டு, அவனை முத்தஞ்செய்தான். குமாரன் தகப்பனை நோக்கி: தகப்பனே பரத்திற்கு விரோதமாகவும்,உமக்கு முன்பாகவும் பாவஞ்செய்தேன், இனி உம்முடைய குமாரன் என்று சொல்லப்படுவதற்கு நான் பாத்திரன் அல்ல என்று சொன்னான். அந்பொழுது தகப்பன் தன் ஊழியக்காரரை நோக்கி, நீங்கள் உயர்ந்த வஸ்திரத்தைக் கொண்டு வந்து, இவனுக்கு உடுத்தி, இவன் கைக்குமோதிரத்தையும் கால்களுக்குப் பாதரட்சைகளையும் போடுங்கள். கொழுத்த கன்றைக் கொண்டு வந்து அடியுங்கள். நாம் புசித்து, சந்தோஷமாயிருப்போம். என் குமாரனாகிய இவன் மரித்தான், திரும்பவும் உயிர்த்தான். காணமற்போனான், திரும்பவும் காணப்பட்டான் என்றான். அப்படியே அவர்கள் சந்தோஷப்படத் தொடங்கினார்கள் *(லூக்.15:17-24)* என்று. நாமும் தேவனிடத்தில் விலகிப்போனால் என்ன நடக்குமென்று இச்சம்பவம் தெளிவுப்படுத்துகிறது. நாம் அப்படிச் செய்யமாட்டோம். ஆனால் நாம் அப்படிச் செய்தால் நம்முடைய தகப்பன் நம்மை மன்னித்து திரும்பவும் ஏற்றுக்கொள்ளும்படியாக, நாம் மனந்திரும்பி நம்முடைய தவறுகளை அறிக்கை செய்வோம். யாக்கோபு ஆசிரியர் **நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம் பண்ணுங்கள். நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது எனக் கூறுகிறார். *(யாக்.5:16)***

இப்பொழுது,மறுபக்கத்தைப் பாருங்கள், நமக்கு விரோதமாக ஒருவன் பாவம் செய்துவிட்டால் என்ன செய்யவேண்டும்?

இப்படிப்பட்ட சமயங்களில் கிறிஸ்துவின் ஆலோசனையைக் கவனியுங்கள். **உன் சகோதரன் உனக்கு விரோதமாக குற்றஞ்செய்தால் அவனிடத்தில் போய், நீயும் அவனும் தனித்திருக்கையில், அவன் குற்றத்தை அவனுக்கு உணர்த்து; அவன் உனக்குச் செவிகொடுத்தால், உன் சகோதரனை ஆதாயப்படுத்திக் கொண்டாய்.** அவன் செவிகொடாமற்போனால் இரண்டு மூன்று, சாட்சிகளுடைய வாக்கினாலே சங்கதிகளெல்லாம் நிலைவரப்படும்படி, இரண்டொருவரை உன்னுடனே கூட்டிக்கொண்டு போ. அவர்களுக்கு அவன் செவிகொடாமற்போனால் அதைச் சபைக்கு தெரியப்படுத்து; சபைக்கும் செவிகொடாமற்போனால், அவன் உனக்கு அஞ்ஞானியைப்போலவும் ஆயக்காரனைப்போலவும் இருப்பானாக. பூலோகத்திலே நீங்கள் எவைகளைக் கட்டுவீர்களோ அவைகள் பரலேகாத்திலும் கட்டப்பட்டிருக்கும்; பூலோகத்தில் நீங்கள் எவைகளைக் கட்டவிழ்ப்பீர்களோ அவைகள் பரலேகாத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும் என்று, மெய்யாகவே உங்களுக்கு சொல்லுகிறேன்.*(மத்.18:15-18)*

நாம் மேலே கண்ட காரியங்களெல்லாம் நமக்குச் சொல்லும் பாடம் என்னவெனில் ஒருவன் தேவனுக்கு உகந்தவனாக இருக்கவேண்டுமானால், மனந்திரும்புதலைப் பெற்று கர்த்தராலே மன்னிக்கப்படவேண்டும்.

ஒரு பிராந்திய சபை ஆரம்பிக்கப்பட்டு அது பரிசுத்தமானதாக காக்கப்படவேண்டுமானால், இந்த சத்திய வசனங்களின் உபதேசத்தை உங்கள் மன்தில் இருத்திக்கொள்ள வேண்டும்.

J.C.CHOATE

**J.C. சோட்**

---

**நினைவு கூறும்படி இதைச் செய்யுங்கள்.**
**(இராப்போஜனத்தில்) 1கொரி.11:24,25**

1. இழந்து போனதைத் தேடவும், இரட்சிக்கவும் வந்தார் என்று நினைவு கூறும்படி........(லூக்கா 19:10)
2. சிலுவையில் அவர் பட்ட பாடுகளை நினைவு கூறும்படி....(மத்26:36-27:50)
3. அவரின் உயர்த்தெழுதலை நினைவு கூறும்படி........(லூக்.24:1-6)
4. அவர் பரமேறிச் சென்றதை நினைவு கூறும்படி.......(அப்.1:9-11)
5. அவரது வருகையை நினைவு கூறும்படி.......(2தெசலோ.1:7,8)

*****

பெண்கள் பகுதி

# கவலையை விடுங்கள்



இன்றைக்கு நாகரிகம் என்ற பெயரில் உலகில் பல மாற்றங்கள் தோன்றிவருகிறது. மனிதன் பல வகைகளில் தன் உள்ளத்திற்கு மகிழ்ச்சியைத் தேடி அலைகிறான். ஆனால் முக்கியமானதை விட்டு விட்டு தேவையில்லாத காரியங்களில் ஈடுபடுவதால் அவன் உள்ளம் மகிழ்ச்சியை அடையமுடிவதில்லை மாறாக துக்கத்தையும், கவலையை விலைகொடுத்து வாங்கி வாழ்க்கையை கசப்பாக்கிக் கொள்கிறான். குடும்பம், பிள்ளை வளர்ப்பு, வேலை, திருமணம், உறவு இப்படி எதிலும் ஒரு திருப்தியை அடையாமல் கவலையே உருவாகக் கொண்டு, வாழ்க்கையை நடத்திக் கொண்டுள்ளான்.

நீதி.15:13 ம் வசனத்தில் **மனோதுக்கத்தினால் ஆவி முறிந்துபோம்** என்று அழகாக சொல்லுகிறது. மேலும் மத்தேயு 6:27ம் வசனத்தில் **கவலைப்படுகிறதினாலே உங்களில் எவன் தன் சரீர அளவோடு ஒரு முழத்தைக் கூட்டுவான்?**என்று பார்க்கிறோம். கவலை என்ற பிரச்சனையை தீர்ப்பதற்கென்றே இவ்வதிகாரம் எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளது. கவலை என்பது வாழ்க்கையின் இருட்டான பகுதி. பகலைக் காட்டிலும் இரவு சிறந்தது என்று ஒரு அறிஞன் கூறுகிறான். ஏனென்றால், பகலில் நாம் நம் பக்கத்தில் உள்ள மரம்,செடி, வீடு, மனிதன் இவைகளைத் தான் பார்க்க முடியும். ஆனால் இரவிலோ தூரத்திலுள்ள நட்சத்திரங்களையும்,விண்ணையும் பார்த்து ரசிக்க முடியும் என்று. அப்படியானால் கவலை என்ற இருட்டு பகுதியில் நாம் ரசிக்கக் கூடிய நன்மைகளையும் நாம் காணமுடியும்.

ஞானியின் கூற்றுப்படி மனக்கவலையினால் ஆவி முறிந்துபோம் என்றால் அதற்காக நாம் என்னதான் செய்வது? ஒரு மூலையில் போய் உட்கார்ந்து கொள்வதா? அல்லது ஓயாமல் அழுவதா?இதற்கென்ன முறையை கையாளலாம் என்று பார்ப்போம். குறிப்பாக, கிறிஸ்தவர்களாகிய நமக்கு, என்னதான் வழிவகை உள்ளது என்று வேதத்திற்குள் சென்று பார்ப்போம்.

நகோமி, ரூத், ஆகியோரின் வாழ்க்கைக்குச் செல்வோம். நகோமியை எடுத்துக்கொண்டால் அவள் கவலையில் ஒருமாஸ்டர் பட்டம் வாங்கியிருக்கிறாள் என்று கூடச் சொல்லலாம். அவள் தன்னை நகோமி என்று சொல்லாமல் மாராள் என்று சொல்லுகிறாள் *(ரூத்.1:20)*.

**முதலாவதாக,** நகோமி தன் வாழ்க்கையில், தனக்கு இருக்கும் நஷ்டத்தை எல்லோரும் அறிய ஒத்துக்கொண்டாள். தன்னைத் தாழ்த்தினாள்.ஆனால், இன்று நம்மில் அநேகர் ஒத்துக்கொள்வதில்லை. பிறரிடம் மறைத்து வாழத்தான் விரும்புகிறோம்.

**இரண்டாவதாக,** அவள் வாயின் வார்த்தைகளைப் பார்க்கும்போது, மனக்கிலேசம் அவளுக்கு இருந்தது. ஆனால் நம்பிக்கை இழக்கவில்லை. நாமோ துன்பம் வரும்போது முறுமுறுக்கிறோம். நம்பிக்கையை, விசுவாசத்தை இழந்து விடுகிறோம்.

**மூன்றாவதாக,** கசந்து போன நிலையில் இருந்த நகோமி மற்றவர்களைக் குறைகூறவில்லை. யோபுவின் மனைவியை நாம் கவனிக்கும்போது கணவன் உயிரோடு இருக்கும்போதே அவனை திட்டி தேவனை தூஷிக்கிறாள்.(யோபு2:9) ஆனாள் நகோமி என்ன செய்தாள்? தேவனை அவள் ஒரு போதும் தூஷிக்கவேயில்லை.

**நான்காவதாக,** ரூத்.2:20ம் வசனம் நகோமியின் தேவ நம்பிக்கைக்கு மகுடமாக இருக்கிறது. **உயிரோடிருக்கிறவர்களுக்கும், மரித்தவர்களுக்கும் அவர் தேவனாயிருக்கிறார்** என்று அறிக்கையிடுகிறாள். ரூத்தின் வாழ்க்கையிலிருந்து கவலைக்கு எது மருந்து, நாம் கண்டு கொள்ளலாம்.

நாகோமியின் மருமகள்களான ஓர்பாள், ரூத் ஆகிய இருவரில் ஓர்பாள் தன் மாமியின் வார்த்தையைக் கேட்டு, வந்த வழியே சுலபமாகத் திரும்பிபோய்விட்டாள். பிரிந்து போகும் வழி என்பது சுலபமானது. ஆனால் நிலைத்திருக்க முடிவெடுத்தல் என்பது மிகவும் கடினமானது. ஓர்பாள் ஒப்புக்காகத்தான் மருமகளாக இருந்தாள். ஆகவேதான், ஓடிப்போனாள். ரூத் முடிவெடுக்கும்போது உண்மையான மருமகளாக இருந்தாள். ஓர்பாள் பின் நோக்கிப் பார்த்தாள். தன் மாமியின் கடைசிக் காலத்தைப் பற்றி ஓர்பாள் சிந்திக்கவில்லை. ஆனால் ரூத்தோ முன்னோக்கிப் பார்த்தாள். வயதான மாமியின் நலனில் அக்கறை கொண்டாள்.

தேவனுடைய ஜனங்களை நம்பி அவர்கள் பிறகே போனால் கட்டாயம் நன்மைவிளையும் என்பதை ரூத் நன்றாக அறிந்திருந்தாள். ரூத்.1:16ல் உம்முடைய தேவன் என்னுடைய தேவன் என்று கூறுகிறாள். தன்னுடைய முந்தைய கடவுளை இஸ்ரவேலின்

தேவனோடு ஒப்பிட்டுப் பார்க்கிறாள். அதன்மூலம் உண்மையைக் கண்டு கொண்டு, ஞானமாக முடிவெடுத்தாள். ரூத் எப்போதும் முகத்தைப் பார்த்து செயல்படாமல் உள்ளத்தைப் பார்த்து, செயல்பட்டவளாயிருந்தாள்.

ரூத்தின் ஆசீர்வாதத்திற்கு காரணமாயிருந்த அருங்குணம் அவளிடம் காணப்பட்ட கீழ்ப்படிதல். ரூத்.3:5ல் அதற்கு அவள் நீர் எனக்கு சொன்னப்படியெல்லாம் செய்வேன் என்றாள். இதுதான் அவள் ஆசீர்வதிக்கப்பட்டதின் இரகசியம். ரூத் நகோமியிடம் இந்த வார்த்தையைக் கூறுகிறாள். நம்புவதற்கே இடமில்லாத இந்த நகோமியை நம்பினாள் இந்த ரூத். நாம் நம்மை ரூத்தோடு ஒப்பிட்டுப் பார்ப்போம். சர்வ வல்லமையும், அதிகாரமும் நிறைந்த நம்முடைய தேவன் மீது நாம் நம்பிக்கை வைத்திருக்கிறோமா? அவர் வேதாகமத்தில் வெளிப்படுத்தியுள்ள அவருடைய வார்த்தையின்படியெல்லாம் செய்கிறோமா? ரூத்தைபோல, தேவன் சொன்னபடியெல்லாம் செய்தால் தான் நமக்கும் ஆசீர்வாதம் கிடைக்கும். ஆம், நாம் தேவனுடைய வார்த்தை சொல்லுகிறபடியெல்லாம் செய்யவேண்டும். அப்பொழுது கவலைகள், பிரச்சினைகள் தீரும்.

ரூத் என்று சொல்லப்படுகிற ரூபவதி, இயேசுக்கிறிஸ்துவின் வருகை மட்டும் நினைத்தருளப்படுவாள். நாமும் அவருடைய வார்த்தையின்படியெல்லாம் செய்வோமானால் நம்முடைய கவலை, பிரச்சனைகளுக்கு விடுதலை கிடைக்கும். ரூத் தேவனுடைய பார்வையில் பிரியமுள்ளவளாய் இருந்தபடியால்தான் அவளுடைய பெயர் இயேசுகிறிஸ்துவின் ஜெந நத்தின் விபரத்தில் இடம் பெற்றுள்ளது. (மத்.1:5). அதைப்போல நம்முடைய பெயர் ஜீவ புஸ்தகத்தில் இடம்பெற வேண்டுமானால் இஸ்ரவேலின் தேவன் சொல்லியபடியெல்லாம் செய்யவேண்டும்.செய்வோமா?

R.R. நாயகம்.

## இரட்சிப்பின் படிகள்

| | | |
|---|---|---|
| கேள்விப்படுதல் | : | ரோமர் 10 : 17 |
| விசுவாசித்தல் | : | மாற்கு 16 : 16 |
| மனந்திரும்புதல் | : | அப்போ. 2 : 38 |
| அறிக்கையிடுதல் | : | ரோமர் 10 : 10 |
| ஞானஸ்நானம் பெறுதல் | : | அப்போ.22 : 16 |

# கர்த்தருக்கு கீழ்ப்படியுங்கள்

கிறிஸ்தவர்கள் தனிப்பட்ட சுவிசேஷ ஊழியத்தின் ஈடுபாடின்மைக்கு காரணமாக, தாங்கள் சுவிசேஷத்தைப் பகிர்ந்து கொள்ள சரியான நபர் கிடைப்பதில்லை என்பதைச் சொல்லி சமாளிக்கின்றனர். உண்மையாகவே, அவர்கள் அதற்காக முயற்சித்திருப்பார்களானால், அவர்கள் ஒருவேளை தவறான இடத்தில் முயற்சித்திருக்கலாம்.

சரியான நேரத்திலும் சரியான விதத்திலும் நாம் அணுகுவோமானால்,அநேகர் சுவிசேஷத்தை கற்றுகொள்ள ஆயத்தமாயிருக்கிறார்கள். நண்பர்களுடனும், நம்முடன் பணியாற்றுபவர்களுடனும் வேதத்தை பகிர்ந்து கொள்ளலாம். ஒரு சில கிறிஸ்தவர்கள் இருக்கும் குடும்பத்திலுள்ள கிறிஸ்தவரல்லாத நபருடன் வேதத்தைப் பகிர்ந்து கொள்ளலாம். கர்த்தருடைய சபையின் ஆராதனையில் கலந்துகொள்கிறவர்கள் கர்த்தரை சிரத்தையுடன் தேடிக்கொண்டிருப்பார்கள் என்பதில் ஐயமில்லை. அவர்களை வேதத்தைக் கற்றுக்கொள்ளும்படி நாம் அழைக்கும்போது அந்த அழைப்பை அதிகம் வரவேற்பார்கள். ஆனால் யாரும் அவர்களுக்கு போதிக்காததினாலோ அல்லது ஊக்கப்படுத்தாதிததினாலோ, அவர்கள் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியாமல் இருக்கிறார்கள்.

இழந்து போன ஆத்துமாக்களை ஆதாயப்படுத்துவது அதிகக் கடினமான வேலையாயிருக்கும். ஆனால் அது மிகவும் பிரயோஜனமுள்ளதாகும். சற்று அதைக் குறித்து சிந்தியுங்கள். **கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிய நீங்கள் ஒருவருக்கு உதவலாம்.** பரலோகத்தில் கிறிஸ்துவுடன் என்றென்றும் வாழ ஒருவரை ஆயத்தப்படுத்தும்படி நீங்கள் உதவலாம். இதைக் காட்டிலும் அதிமுக்கியமானக் காரியம் வேறொன்றுமில்லை.

நீங்கள் செய்யும் பணியில் மிகவும் விரும்பப்படத்தக்கது இழந்துபோன ஆத்துமாக்களை ஆதாயப்படுத்துவதே ஆகும். நீங்கள் கற்பிக்கும் ஒருவர், சுவிசேஷத்திலுள்ள இரட்சிப்பின் திட்டத்தைப் புரிந்து கொண்டு, ஞானஸ்நானத்தின் மூலம் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து, கிறிஸ்துவுக்குள் புதிய ஜீவியத்தில் பிரவேசிப்பது எவ்வளவு அற்புதமான காரியமாகும்.

மண்பாண்டங்களாகிய நம்மிடத்தில் தேவன் சுவிசேஷத்தை ஒப்படைத்திருக்கிறார் என்பதையும் அதை உலகிற்கு அறிவிக்கவேண்டியது நமது கடமை என்பதையும் நாம் உணர வேண்டியவர்களாயிருக்கிறோம். (மத்.28:19,20 : மாற்கு.16:15,16). நாம் கர்த்தரைப் பிரியப்படுத்த வேண்டுமானால், அவரது பணிக்கென நம்முடைய நேரத்தை செலவிடவேண்டும்.

**Dale Grisson**

## வாலிபர் பகுதி

# பதிவிருக்கும் பகைவன்



மனிதனுக்கு பரமனால் கொடையாக கொடுக்கப்பட்ட ஆத்துமாவில் பாவம் என்னும் பயங்கர இருள் படர்ந்திருக்கையில், சுடர் ஒளி வீசி உதித்திடும் பகலவனைப்போல் மெய் ஒளி வீச இப்புவியில் உதித்த அருணோதயமாம் அருமை ஆண்டவரைக் குறித்துகேட்டறிந்து, ஆவியானவரால் அருளப்பட்டு, மெய்மருந்தை இப்புவிக்கு அளித்திட மருத்துவனாம் லூக்கா எழுதினான் ஒரு நற்செய்தி நூல்.

தம் வார்த்தையால் உருப்பெற்ற அகிலத்தில், வாழ்ந்தபோது, அண்டசராசரங்களைப் படைத்த இயேசு உவமையில் வாய்மொழிந்தார். இவ்வுலக சம்பவங்களை கொண்டு அவ்வுலக உண்மைகளை உதிர்த்தார். அவர் உதிர்த்த உவமைகளை தொடுத்து ஆவியானவர் துணைகொண்டு நமக்கு தொகுத்துக்கொடுத்திருக்கிறார் லூக்கா. அந்நூலின் பத்தாம் அதிகாரத்தில் விண்ணுலக வித்தாம் அவர் **பிறனை நேசி** என்று நல் ஆலோசனை தருகிறார். எருசலேமிலிருந்து, எரிகோவிற்கு பயணித்த ஒரு மனுஷனை பதிவிருந்து தாக்கியது கள்ளர் கூட்டம். கயவர்கள், அவன் பொருளை கவர்ந்தெடுத்தோடு நிற்காமல், யாக்கை மறைக்க அணிந்திருந்த உடுக்கையையும் உரித்துவிட்டு, குற்றுயிராக விட்டுப் போனார்கள். (லூக்.10:3) மனித வரலாற்றில், முதல் கொலையாக தன் சகோதரனை மாய்த்த காயீனிடம், தேவன் **நீ நன்மை செய்யாதிருந்தால் பாவம் உன் வாசற்படியில் படுத்திருக்கும்** என்றார் (ஆதி.4:7) காயீன் கொலை செய்யும் முன்னே,பாவம் என்னும் பகைவன் பதிவிருந்து தாக்குவான் என தேவன் எச்சரித்தார். அவனோ அந்த எச்சரிப்பை அலட்சியமாயெண்ணி பகைவன் விரித்த வலையில் விழுந்தான். வாலிபர்களாகிய நம்முடைய வாழ்க்கைப்பயணத்திலும் பாவம் என்பது எப்படி ஒரு கள்வனாக திகழ்கிறதென்று இம்மாத கட்டுரையில் பார்ப்போம்.

### நற்குணத்தைக் கெடுக்கும் நயவஞ்சகன்

குணமில்லாத மாந்தரை, மந்தியும் மதியாது என்றால் அது மிகையாகாது. இன்னல் மிகு இவ்வுலக யாத்திரையில் கோணலான பல கவின்மிகுக்காட்சிகளைக் காண்பித்து, இளைஞர்களின் இதயமதை கரடுமுரடாக்குவதே பசாசின் தினப்பசி. நல்வினை, தீவினை அறியும் பருவமடைந்த நாம்இதையறிந்து செயல்படவேண்டும்.

எனக்கன்பான வாலிப நண்பனே! உங்கள் வாயின் வார்த்தைகள், உங்கள் நித்தியத்தை தீர்மானிக்கும் வலிமை வாய்ந்ததென்று அறியுங்கள். இயேசுவின் புதிய உடன்படிக்கையை எடுத்துரைக்கும் புதிய ஏற்பாட்டின் முதல் நூலில் **மனுஷர் பேசும் வீணான வார்த்தைகள் யாவையுங்குறித்துநியாயத்தீர்ப்புநாளிலே கணக்கொப்புவிக்கவேண்டும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்** (மத்.12:36) என எச்சரிக்கிறார். ஞானி நம் நாவைக்குறித்து நவில்கையில் **மரணமும் ஜீவனும் நாவின் அதிகாரத்திலிருக்கும்; அதில் பிரியப்படுகிறவர்கள் அதின் கனியைப் புசிப்பார்கள்** என்ற பேருண்மையை எழுதியிருக்கிறார்.(நீதி.18:21). இந்த வசனத்தை அறிந்த பிசாசு உடனே உஷாரானவனாய் மனிதனின் வாயில் வீணான வார்த்தையை எப்படியாவது கொண்டுவரவேண்டும் என்று மறைந்திருந்து பல வேலைகளைச் செய்வான். இந்த இளம் பிராயத்தில் நமக்கும் புதிதாய் தென்படும் விஷயங்களை காண்பதிலும், அதைக் குறித்துப் பல மணி நேரம் பேசுவதிலும் ஓர் தனிக்களிப்புண்டு என்ற எண்ணத்தை நம் இதயத்தில் விதைப்பான் இந்த விஷமி.

வாலிபப்பிராயத்தில் நாம் குடும்பத்தில் செலவிடுகிற நேரத்தைக் காட்டிலும் நம் நண்பர்களுடன் செலவிடுகிற நாழிகைதான் அதிகமானது. நண்பர்களோடு உரையாடுவது உற்சாகத்தையும், உவகையையும் நமக்குக் கொடுக்கலாம். ஆனால், நம் உற்சாகமும் உவகையும் மாம்சத்திற்குரியதாய் இருக்குமானால் அது மிகவும் ஆபத்தானதாக முடியும். பேச்சில் இன்பம் கண்ட நாம், செயல்வடிவாக்கத் துடிக்கும் காலத்தை நமக்குத் தெரியாமல் பதிவிருந்து புகுத்துவான் இந்தப் பாதகன். ஆகவே தான் எனக்கன்பானவர்களே பவுல் தன் விசுவாசத்தில் பெற்றெடுத்த உத்தம குமாரனாகிய தீமோத்தேயுவிற்கு எழுதும்போது **சீர்கேடும் கிழவிகள் பேச்சுமாயிருக்கிற கட்டுக்கதைகளுக்கு விலகி, தேவபக்திக்கேதுவாக முயற்சி பண்ணு** (1தீமோ.4:7)என்ற உயர்ந்த நெறியை கற்றுத்தருகிறார்.

குணத்தைக் கெடுக்கும்படி அவன் எடுக்கும் பிரயாசத்தின் முதற்படியாய் உங்கள் பேச்சைக் கெடுப்பான். அதில் அவனை வெற்றிகொள்ள விடுவோமென்றால் சமுதாயம் என்னும் சீர்கேடான அவனுடைய ஆயுதத்தைப் பயன்படுத்தி நம்மேல் **ஆகாத பேச்சுக்காரன்** என்ற முத்திரையைக் குத்தி, சோர்வடையச் செய்து, நம்மை அறியாமலே, அந்த சீர்கேடான நிலைக்கு அவனால் தள்ளப்படுவோம். இதை தவிர்ப்பதற்கு அவனுடைய அடிப்படை

ஆயுதத்தை நீங்கள் தகர்த்தெறிய வேண்டுமென்பதற்காய் இவைகளை எழுதுகிறேன். பவுல் கொரிந்தியருக்கு எழுதுகையில் **ஆகாத சம்பாஷணைகள் நல்லொழுக்கங்களைக் கெடுக்கும்** *(1.கொரி.15:33)* என்று நமக்கு தெளிவுபடுத்துகிறார். ஆகவே நம் நல்லொழுக்கத்தை காக்க முதலில் வீண்பேச்சை விட்டு விலகுவோமாக. ஞானியின் அறிவுரைப்படி நாவைக் காப்பதன் மூலம் ஆத்துமாவை காத்துக்கொள்வோமாக. *(நீதி.21:23)*.

## பகுத்தறிவும் சுயமரியாதையையும் பறிக்கும் பசப்பன்.

பரமனால் படைக்கப்பட்டவைகளில் மனிதனுக்கே உரித்தான பகுத்தறிவை அதாவது நன்மையானது தீமையானது எது என்று நிதானித்து அறிகிற திறனை இந்த வழிப்பறி கொள்ளையன் மறைந்திருந்து நாம் சற்றும் எதிர்பாராத விதத்தில் தாக்கி நம்மை நிலைகுலையச் செய்வான். இந்த வாலிபப்பிராயத்தில் வாழும்நாம் இந்தக் காரியத்தைக் குறித்து மிகவும் ஜாக்கிரதையாக இருக்கவேண்டியது அவசியம்.

எபிரேய ஆசிரியர் பாவத்தின் வஞ்சனையினாலே கடினப்பட்டு போகாதபடிக்கு, ஒருவருக்கொருவர் புத்திசொல்லுங்கள். *(எபி.3:13)* என்ற உண்மை கலந்த அறிவுரையை நம்முன் வைக்கின்றார். பாவம் எனும் இப்பகைவன் நம்மை நம்பவைத்து ஏமாற்றுவான் என்று எச்சரிப்பதை நாம் கவனிக்கலாம். ஆதிகால முதல் சாத்தானுடைய தந்திரமே தீமையை விளைவிக்கும் ஒன்றை அதன் தோற்றத்தினால் மாற்றி நன்மையை விளைவிப்பது போல் நம்முன் காண்பிப்பான். இன்றும் அதை நம்பி சில இளைஞர்கள் சரீரத்திற்குத் தேவையான பலத்தைப் பெறுவதற்கு உட்கொள்ளும் ஆகாரத்தை சாப்பிடவேண்டிய வாயில் பாக்குகளை ஒதுக்கிக்கொண்டும், புகைபிடித்துக்கொண்டும் தங்கள் ஆயுசு நாட்களை தாங்களே குறைத்துக்கொள்கின்றனர்.

இப்படிப்பட்ட இளைஞர்கள் பிறரால் மதிக்கப்படுவதில்லை. ஒரு வேதாகம உதாரணத்தை உங்கள் முன் வைக்க ஆசைப்படுகிறேன். இஸ்ரவேலை ஆண்ட சவுல், பகைவர்கள் தனக்கு எதிராய் வருவதைக்கண்டு சாமுவேலும் தன்னிடத்திற்கு வர தாமதமான அச்சூழ்நிலையில் தேவனிடம் விண்ணப்பம் பண்ணவேண்டும் என்கின்ற நோக்கத்தில், ஆசாரியர்கள் செய்ய வேண்டும் என்று தேவனால் கட்டளையிடப்பட்ட பலி செலுத்த வேண்டிய வேலையைத் தானே துணிந்து செய்தான்.இதில் என்ன தவறு என்று

நீங்கள் யோசிக்கக் கூடும். ஆனால் இச்செயல் சவுலின் சுயமரியாதையைக் கெடுத்திருக்கிறது என்று சொன்னால் ஆச்சரியப்படுவீர்கள். ஏன் என்றால் சாமுவேல் சவுலைப்பார்த்து, புத்தியீனமாய்ச் செய்தீர். தேவனுடைய கட்டளையை மீறினீர், தேவன் இராஜ்யபாரத்தை உம்மிடத்தில் இருந்து எடுத்துப் போடுகிறார் என்று வேதனையுடன் சொன்னார்.

பார்த்தீர்களா! இந்த மாய்மாலக்காரன் விரித்த வலையில் இராஜாக்களும் விழுந்திருக்கிறார்கள். பகைவர்கள் எதிர்த்து வருகிறார்கள் பலி செலுத்த தன்னுடன் சாமுவேலும் இல்லை, தேவனிடம் விண்ணப்பம் பண்ணியும் ஆகவேண்டும். இச்சூழ்நிலையில் சவுலின் மனதில் வேறு வழியென்ன, நானே செய்தால் தவறில்லை என்கின்ற எண்ணத்தை விதைத்து தேவனுடைய கட்டளையை மீறுகிறோம் என்பதை மறைத்து, நினைத்ததை முடித்தான் அவ்வஞ்சகன். இளைஞர்களே! நம்முடைய வாழ்விலும் இப்படி வஞ்சக வலையை விரித்து வைத்து நம் ஆத்துமாவை அழித்துவிடவேண்டும் என்று, கர்ஜித்துத்திரிகிறான், நம் எதிராளியான சாத்தான்.

எருசலேமிலிருந்து எரிகோவுக்குச் செல்லும் சாலையில், கள்வர்கள் குற்றுயிராய் விட்டுச் சென்றவனை அன்போடு கவனித்துக் காப்பாற்றினான் ஒரு சமாரியன். நம்முடைய ஆத்மீக யாத்திரையிலும் பதிவிருந்து நம்மை தாக்கி குற்றுயிராய் விட்டுச் செல்லும் சாத்தானிடமிருந்து தன் இன்னுயிரையும் ஈந்து இறைவடிவாம் இயேசு மீட்டிருக்கிறார். அந்த ஆத்தும நேசரின் அன்பறிந்து, நாம் இம்மையிலும் மறுமையிலும் வாழ்வாங்கு வாழ வேண்டும் என்பதற்காய் தான்அனுபவித்த பரலோக மேன்மையை விட்டு அடிமையின் ரூபமெடுத்து, நாம்அக்கிரமக்காரர்களாய் இருக்கையில் மரித்து, பின்பு உயிர்த்தெழுந்து, சாத்தானின் மரணக் கட்டை ஜெயித்த மகிபனின் சொல்கேட்டு, காலம் தாமதிக்காமல் இந்த வாலிபப்பிராயத்திலேயே நம் சிருஷ்டி கர்த்தரை நினைத்து, அவர் வழியில் நடந்து பரலோகத்தின் பேராசீர்வாதம் பெறுவோமாக.

**ஜே.பிக்கின்ஸ்**

## தேவனுடைய ஊழியர்களின் கவனித்திற்கு

உலக வீடியோ வேதாகம கல்லூரியில் மாணவர்கள் சேர்க்கை நடைபெறுகிறது. உங்களுடைய பிராந்திய சபையில் திருமணமாகாத விசுவாசமும், ஊழிய வாஞ்சையும் மிக்க + 2 தேறிய வாலிபர்கள் இருந்தால் அனுப்பி வையுங்கள்.

அன்புடன் ஆசிரியர்.



# வெளிப்படுத்தின விசேஷம்

**அதிகாரம்.2:1-7**

ஆசியாவிலுள்ள ஏழு சபைகளுக்கு நிருபங்கள் எழுதப்படுவதிலிருந்து, வெளிப்படுத்தல் இரண்டாம் அதிகாரம் ஆரம்பமாகி, தொடர்ந்து மூன்றாம் அதிகாரத்தின் இறுதிவரை போகிறது. இங்கே, ஆசியா என்பது, ரோம ஆளுகைக்கு உட்பட்ட சின்ன ஆசியாவாகும். இன்றைக்கிருக்கிற மேற்கு துருக்கிப் பகுதியில் இது அமைந்திருக்கிறது. வெளிப்படுத்தின நூல் எழுதப்பட்ட கால கட்டத்தில் இப்பகுதியில், ஏழுக்கும் அதிகமான பிராந்திய சபைகள் இருந்தன. ஆனால், நிருபங்களை எழுதுவதற்குக் கர்த்தர் இந்த குறிப்பிட்ட ஏழு சபைகளை மாத்திரம் தெரிந்து கொண்டார். ஏழு என்பது முழுமையைக் குறிக்கிற எண்ணாகும். ஆகவே, இச்சபைகளுக்கு கொடுக்கப்பட்ட செய்தியானது, இது யாருக்கு எழுதப்பட்டதோ அவர்களுக்கு மாத்திரம் உரியதாயிராமல், எல்லாச் சபைக்கும் கொடுக்கப்பட்டுள்ளது. இயேசுவானவர், எழுதப்பட்டுள்ள ஏழு நிருபங்களிலும், **ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதை காதுள்ளவன் கேட்கக்கடவன்** என்று சொல்லுகிறபடியால் இது நமக்கும்தான் என்பதை நாம் அறிந்துகொள்ளுகிறோம். நம்மையும் உள்ளடக்கி இந்த ஏழு நிருபங்களும் கர்த்தருடைய சபையின் அங்கத்தினர்களுக்காக எழுதப்பட்டுள்ளதென்பதை நாம் மிக முக்கியமாக கருத்தில் கொள்ளவேண்டும். இந்நூலில் உள்ள சில வேத வசனங்கள் இழந்துபோனவர்களுக்காக உள்ளது. ஆனால் ஏழு சபைகளுக்கான நிருபங்கள் கிறிஸ்தவர்களுக்காக எழுதப்பட்டுள்ளது. வெளி.2:23 ல் இயேசுவானவர் வலியுறுத்துவதுபோல, இந்தக் காரியங்களை, எல்லாச் சபைகளும் அறிந்துகொள்ள எழுதுகிறார். ஆகவே, கிறிஸ்துவின் சபையின் அங்கத்தினர்களான நாம்,ஒவ்வொருவரும், ஒவ்வொரு சபையும் தேவ சித்தத்தை முழுமையாக நிறைவேற்றும்படியாய், இந்நிருபங்களைப் படிப்பது அவசியம்.

ஏழு சபைகளுக்கான இந்த நிருபங்களை நாம் வேகமாகப் படிக்கும்போது, நாம் அறிந்துகொள்ள வேண்டிய சில முக்கியமான பாடங்களை விட்டு விடுவதற்கு வாய்ப்பு உண்டு. உதாரணமாக

இயேசுவானவர், தன்னை ஒவ்வொரு சபைக்கும் வித்தியாசமான முறையில் அறிமுகப்படுத்துகிறார். அந்த அறிமுகத்திற்கும், அந்த சபைக்கு அவர் என்ன சொல்லுகிறார் என்பதற்கும் ஒரு தொடர்பு உண்டு. இன்னும், ஒவ்வொரு நிருபத்திலும், **ஜெயங்கொள்ளுகிறவன்** என்ற வாக்குத்தத்தம் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த ஒவ்வொரு வாக்குத்தத்தங்களிலிருந்தும் குறிப்பாகக் கற்றுக்கொள்ளவேண்டியவை உண்டு. மேலுமாக, அவர்களுடைய கிரியைகளை அறிந்திருக்கிறேன் என்று இயேசு ஒவ்வொரு சபைக்கும் சொல்லியபிறகு அதற்கான விளக்கம் கொடுக்கிறார். ஏழு சபைகளில், ஐந்திற்கு சொல்லுவதற்கு சில நற்காரியங்கள் இயேசுவிடம் இருந்தது. இக்காரியங்களிலிருந்து நாம் பின்பற்றுவதற்கு சில நல்ல மாதிரிகளைப் பார்க்கிறோம். ஆனால், இந்த ஏழு சபைகளில், ஐந்திற்கு எதிரான காரியங்களும் இயேசுவிடம் இருந்தது. இவைகளிலிருந்து, நாம் எதைக் செய்யக்கூடாது என்பதையும் கற்றுக்கொள்ளுகிறோம். தங்களுடைய நிருபங்களைப்பெற்றுக்கொள்ளும் முன்பாக, இயேசுவிடமிருந்து கண்டனங்களைப் பெற்றுக்கொண்ட அந்த ஐந்து சபைகள், தங்களைப் பற்றி எப்படி எண்ணியிருப்பார்கள் என்று நினைக்கிறீர்கள்? தாங்கள் தேவனுக்குப் பிரியமில்லாதவர்கள் என்பதைக் கண்டிருப்பார்களா? இருக்காது. ஏனெனில், *நீதி.21:2* இவ்விதம் சொல்லுகிறது, ***மனுஷனுடைய வழியெல்லாம், அவன் பார்வைக்குச் செம்மையாக தோன்றும்; கர்த்தரோ இருதயங்களை நிறுத்திப் பார்க்கிறார்.*** மனிதன், தான் தவறில் இருக்கும்பொழுது கூட, தான் செய்வது சரிதான் என்று நினைக்கும் இயல்புள்ளவனாக இருக்கிறான். ஆனால், தேவனோ, இருதயங்களை ஆராய்ந்து பார்த்து, நாம் எப்படிப்பட்டவர்கள் என்பதை அறிந்து வைத்திருக்கிறார். தேவன் பார்க்கும் விதமாக நாம் நம்மை ஒருபோதும் பார்க்காவிடில் என்ன ஆகும்? நாம் எப்பொழுதாவது மாறுவோமா? மாறமாட்டோம். ஆகவேதான், ஞானி சாலமோன் நீதிமொழிகளில், ***மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழி உண்டு; அதன் முடிவோ மரண வழிகள்*** *(நீதி.14:12)*என்று சொல்கிறார்.

நாம் நம்முடைய தவறுகளிலும், பெலவீனங்களிலும் நிலைத்திருந்தால், முடிவில் நம்முடைய ஆத்துமாக்களை இழந்து போவோம். ஆகவேதான், ஆசியாவிலுள்ள சபைகளுக்கு எழுதப்பட்ட இந்தக் கடிதங்கள் மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது. இது அந்த ஏழு சபையாரின் கண்களை மாத்திரம் திறக்கும்படி எழுதப்படாமல், நம்முடைய கண்களையும் திறக்கும்படியாகவே எழுதப்பட்டுள்ளது. இந்நிருபங்களின் மூலமாக நாம் நம்மைப்பார்க்கவேண்டும். இந்த நிருபங்களுக்குள்ளாகச் சென்று நாம் படிக்கும்போது, ஒவ்வொரு சபைக்கும் எழுதப்பட்டுள்ள எல்லாக் கருத்துக்களையும் கவனித்துப் பார்க்க உள்ளோம். அதன் மூலம் நாம்

இவைகளில் எந்த வகையான ஒரு சபையைச் சார்ந்தவர்களாக இருந்தாலும், நாம் தேவனைப் பிரியப்படுத்துகிறவர்களாக உள்ளோமா என்பதை உறுதி செய்து கொள்ளலாம். இந்தத் தொடர் பாடம் முழுமையும் நாம் நம்மைச் சோதித்துப் பார்த்து (2.கொரி.13:15), நாம் அங்கமாக இருக்கின்ற சபைக்கு, கர்த்தர் என்ன எழுதுவார்? என்ற கேள்வியைக் கேட்போம். தேவனுடைய சித்தத்திற்கு இசைவானதாக எவைகளெல்லாம் இருக்கிறதோ அவைகளைத் தொடர்ந்து செய்து, எவைகளெல்லாம் மாற்றப்படவேண்டுமோ அவைகளை மாற்றுவோமாக!

வெளிப்படுத்தல் இரண்டாம் அதிகாரத்தில் எழுதப்பட்ட முதல் கடிதம் எபேசு சபைக்கு. முதலாம் வசனத்தில், எபேசு சபையாருக்கு, இயேசு தன்னை இவ்விதம் விவரிக்கிறார். **ஏழு நட்சத்திரங்களைத் தம்முடைய வலது கரத்தில் ஏந்திக்கொண்டு ஏழு பொன் குத்துவிளக்குகளின் மத்தியிலே உலவிக்கொண்டிருக்கிறவர்என்று** தூதர்களாகிய நட்சத்திரங்கள் கிறிஸ்துவின் கரத்தில் இருக்கிறது.(1:20) சபைகளாகிய பொன்குத்துவிளக்குகளுக்கு மத்தியில்இயேசு தாமே உலாவிக்கொண்டுள்ளார். அவர் குத்துவிளக்குகளுக்கு மத்தியிலே உலாவுகிறபடியினாலே, ஏன் அந்த நிருபத்தின் கடைசியில், எபேசியர்களை, மனந்திரும்பாத பட்சத்தில் விளக்குத் தண்டை நீக்கிப் போடுவேன் என எச்சரிக்கிறார் என்பதற்கான உண்மை தெரியும்.குத்துவிளக்குகளின் மத்தியிலே உலாவுதல் என்பதற்கும் அவைகளை நீக்கி போடுவேன் என்பதற்குமான நெருங்கிய தொடர்பானது, இயேசுவுக்கு சபையின் மீது எந்தளவு அதிகாரமிருக்கிறதென்பதைக் காட்டுவதற்கு தெளிவான விளக்கமாக உள்ளது. கிறிஸ்து சபையைக் கட்டினார்.(மத்.16:18). சபைக்காக மரித்தார் (எபே.5:25) தனதுஇரத்தத்தாலே கிரயம் பெற்றார். (அப்.20:28) அவர்தான் சபையின் ஒரே தலைவர். (எபே.1:22,5:23, கொலோ1:18). இது நாம் ஒருபோதும் மறக்கக்கூடாத பாடம். கர்த்தருடைய வழியில் நாம் காரியங்களை செய்யாவிட்டால், அவர் சபையினுடைய விளக்குத்தண்டை நீக்கிப்போடுவார்.

ஒரு முப்பது ஆண்டுகளுக்கு முன்பாக, எபேசுவிலிருந்து சபைக்கு நிருபம் எழுதப்பட்டதை நாம் நினைவுக்கு கொண்டுவர முடியும். அதில்,பவுல் தீமோத்தேயுவை எபேசுவுக்கு அனுப்பி, பொய்யான உபதேசங்களைக் குறித்துப்பேசவோ, உபதேசிக்கவோ கூடாது எனஎச்சரிக்க வேண்டியாதாயிருந்தது.(1.தீமோ.1:3-7, 4:11-16, 2.தீமோ:2:14-18; 4:1-5). தீமோத்தேயு தன் வேலையை ஒழுங்காகவே செய்தார். மீண்டும் முப்பது ஆண்டுகள் கடந்த நிலையிலும், எபேசுசபையானது விசுவாசத்திற்காகப் போராடிக் கொண்டிருக்கிறது. வசனம் இரண்டில், நீ பொல்லாதவர்களைச் சகிக்கக் கூடாமலிருக்கிறதையும் அப்போஸ்தரலல்லாதவர்கள் தங்களை அப்போஸ்தலரென்று சொல்லுகிறதை நீ சோதித்து, அவர்களைப்

பொய்யரென்று கண்டறிந்ததைக் குறித்தும் பார்க்கலாம். இன்னும், வசனம்-6ல், இயேசு வெறுக்கிற, நிக்கொலாய் மதஸ்தரின் காரியங்களை அவர்களும் வெறுக்கிறதாகச் சொல்லுகிறது. நிக்கொலாய் மதஸ்தரின் கொள்கை மற்றும் நடக்கைகள் குறித்து நமக்கு உறுதியாய் தெரியாவிட்டாலும்கூட, அவர்கள் பொய்யான கொள்கைகளை உபதேசித்துக் கடைப்பிடித்தார்கள் என்பது திட்டமாகத் தெரிகிறது.(வெளி.2:15). இதிலிருந்து எபேசுவிலிருந்த சபை, தவறான உபதேசங்களையும் பாவமான நடக்கைகளையும் வெகுவாக எதிர்த்துள்ளதென்று தெளிவாகிறது. அதுமாத்திரமல்ல,ஒருவனுடைய விசுவாசத்திற்கு வரும் சோதனைகளை மேற்கொள்வதால் வரும் (யாக்.1:2-4) சகிப்புத்தன்மையும், பொறுமையும் உடையவர்களாயிருந்தார்கள் என்றும் வசனம் மூன்று கூறுகிறது. இன்னும் அவர்கள் கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் இளைப்படையாமல் பிரயாசப்பட்டுள்ளார்கள்.

நாம் அவர்களை அறிந்திருந்தாலோ அல்லது அப்படிப்பட்ட ஒரு சபையில் அங்கமாக இருந்திருந்தாலோ, அவர்களைப் பற்றி நாம் என்ன சொல்லுவோம்? அவர்கள், நம்மைச் சுற்றிலுமிருக்கிற சபைகளிலேயே பெலமுள்ளவர்களென்றும் கொள்கைப்பிடிப்புள்ளவர்களென்றும் சொல்லமாட்டோமா? மேழெுந்தவாரியாகப் பார்க்கும்போது, எபேசுவிலிருந்த கர்த்தரின் சபையைப் போன்ற ஒரு சபையில், பிரச்சனைகள் இருப்பதைக் காண்பது கடினமான ஒன்று. இருப்பினும், வெளி.1:4ல் இந்தச் சபைக்கு விரோதமாக கர்த்தர் சில காரியங்களைச் சொல்லுகிறதைக் காணலாம். தங்கள் ஆதிஅன்பை விட்டு விட்டதற்காக கர்த்தர் அவர்களைக் கடிந்துகொள்ளுகிறார். எபேசு சபையார் அநேக நற்காரியங்களைச் செய்தார்களென்பது உண்மைதான். ஆனால் கர்த்தர் சொல்லுகிறார், நாம் செய்வது எதுவாக இருந்தாலும், அதில் அன்பில்லையானால் பிரயோஜனமில்லையென்று (1.கொரி.13:1-3) ஆரோக்கியமான உபதேசம், முறையான ஆராதனை, ஒழுக்கமான வாழ்க்கை, ஆகிய இவை முக்கியமானதும், அவசியமானதும் தான். ஆனால் மாசில்லாத சுத்தமான பக்தியாயிருப்பதற்கு இன்னும் மேலானவை தேவைப்படுகிறது.

ஆதி அன்பை விட்டுவிடுவது, நம்முடைய ஆத்துமாக்களுக்கே ஆபத்தை விளைவிக்கக் கூடியதாய் இருப்பதால் இங்கே ஆதிஅன்புஎன்றால் என்ன? என்ற முக்கியமான கேள்வி நம்முன் எழுகிறது. முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும், முழு மனதோடும் தேவனிடத்தில் அன்பு கூருவதே முதலாம் பிரதான கற்பனை எனஇயேசு கூறியுள்ளார்.(மத்.22:37-38). நம்முடைய ஆதி

அன்பு என்பது தேவனிடத்தில் அன்பு கூருவதாம். மற்றவை அனைத்தும் இதற்குள் அடங்கியிருக்கிறது.(மத்.22:40) நம்முடைய கர்த்தர், நாம் அவரிடத்தில் காட்டும் அன்பில் குறைவுபட்டு, கனியற்றவர்களாக மாறுவது குறித்து நம்மை எச்சரிக்கிறார். **ஒருவன் உலகத்திலும், உலகத்திலுள்ளவைகளிலும், அன்பு கூர்ந்தால், அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை** என்று தேவன் கூறியுள்ளார். (1யோ.2:15) உலகத்துக்குச் சிநேகிதனாயிருக்க விரும்புகிறவன் தேவனுக்குப் பகைஞனாகிறான்.(யாக்.4:4) தேவனுக்கும், உலகப் பொருளுக்கும் ஒரே சமயத்தில் ஊழியஞ்செய்ய முடியாது. (மத்.6:24) இரண்டில், ஏதாவது ஒன்றைத் தெரிந்தெடுப்பது அவசியம். எப்படி முட்கள் ஒரு செடியைத் தாக்கி, நெருக்கி அது தன் பலனாகிய கனியைக் கொடுக்க முடியாமல் செய்கிறதோ, அதைப் போல உலகக் கவலைகள், ஐசுவரியங்கள், சிற்றின்பங்கள் போன்றவை, நம்முடைய கிறிஸ்தவ அன்பை நெருக்கி அழித்துப் போடும் என இயேசு எச்சரிக்கிறார். (லூக்.8:14) ஆகவேதான், கிறிஸ்துவின் போர்ச்சேவகர்கள், பிழைப்புக்கடுத்த அலுவல்களில் சிக்கிக் கொள்ளகூடாது. (2.தீமோ.2:4) தோமா என்பவன் வழிவிலகிப்போக இதுதான் காரணமாயிருந்தது.(2தீமோ.4:10).

வெளிப்படுத்தல் இரண்டாம் அதிகாரத்தில் நாம் கவனிக்கும்போது, எபேசு சபையார் உலகத்தைச் சிநேகித்தப்படியால், அவர்களின் ஆதி அன்பு குறைந்து போனது போல் தெரிகிறது. அவர்கள் **பொல்லாதவர்களைச் சகிக்க கூடாமலிருந்தார்கள்** என்று இயேசு சாட்சி கொடுக்கிறதினாலே, உலகத்தின் பாவமான காரியங்களை அவர்கள் நேசித்தார்களென்று நாம் சொல்லமுடியாது. (வெளி.2:2) ஆனால், நேரிடையான பாவம் என்று சொல்ல முடியாத சில காரியங்களை நேசிப்பது கூட நம்முடைய ஆத்துமாக்களை இழந்து போகச் செய்யமுடியும். உதாரணமாக, பணத்தை எடுத்துக்கொள்ளுங்கள் அது பாவமான காரியமல்ல, இருப்பினும் பண ஆசை என்பது, எல்லா தீமைக்கும் வேராயிருக்கிறது.(1.தீமோ.6:10) நாம் வாழ்வதற்கு உணவு, தண்ணீர், உடை, ஆகியவை அவசியம். ஆனால் இவைகளை அதிகமாக நேசித்து இவைகளுக்காகவே வாழ்வது, ஒரு கிறிஸ்தவன் தேவன் மீது வைத்திருக்கும் அன்பைக்குறைத்து, இறுதியில் ஒன்றுமில்லாமல் செய்துவிடும்.(மத்.6:24-34 லூக்.12:29-31). நாம் இந்த உலகத்திலுள்ள எதிலும் அளவுக்கதிமாக அன்பு கூறமால் தேவனையும், அவருடைய ராஜ்யத்தையும், அவருடைய நீதியையும் தேடவேண்டும். நாம் கற்று, நம்முடைய மனதில் இருத்திக்கொள்வதற்கு எவ்வளவு ஒரு மகத்தான பாடம் இது.

இப்பாடத்தின்முக்கியத்துவம், வெளி.2:5ல் விவரிக்கப்பட்டுள்ளது. அங்கே, கிறிஸ்து எபேசு சபையினரை பார்த்து, **ஆகையால் இன்ன நிலைமையில் இருந்து விழுந்தாயென்பதை நினைத்து, மனந்திரும்பி,**

**ஆதியில் செய்த கிரியைகளைச் செய்வாயாக; இல்லாவிட்டால் நான் சீக்கிரமே வந்து, நீ மனந்திரும்பாத பட்சத்தில், உன் விளக்குத் தண்டை அதனிடத்தினின்று நீக்கிப்போடுவேன்** என்றார். பிரிவினைச் சபையார் தான் விளக்குத் தண்டை இழந்துபோகும் வாய்ப்புள்ளது. விளக்குத் தண்டை எடுத்துவிட்டால், பிறகு, கர்த்தர் அந்த சபையை அல்லது கூட்டத்தை தனக்குச் சொந்தமானதாக அங்கீகரிக்கமாட்டார். அதன்பிறகு, தேவன் அவர்களோடு ஐக்கியம் கொள்ள மாட்டார். (ஆமோஸ்.3:3, 1யோவா.1:5-7) விசுவாசமும், உண்மையும் இல்லாத ஒரு கிறிஸ்துவின் சபையானது, ஒரு பிரிவினைச் சபையைப் போன்றும், பொய்யான மதக் கூட்டத்தைப் போன்றும் தான் உள்ளதென்பதை நாம் தெரிந்துகொள்ளவேண்டும். அவர்களிடத்தில் விளக்கு தண்டு இல்லை. அந்தக் கூட்டத்தார் மனந்திரும்பாவிட்டால், நித்திய காலமாக இழந்து போவர்.

எபேசு சபையாருக்கான நிருபத்தை முடிக்கும்போது, ஏழாம் வசனத்தில் வாக்குத்தத்தைக் கொடுத்திருக்கிறார். **தேவனுடைய பரதீசின் மத்தியிலிருக்கிற ஜீவ விருட்சத்தின் கனியைப் புசிக்கக் கொடுப்பேன்** என்று. தேவனுடைய எல்லா வாக்குத்தத்தங்கள் போல, இதுவும் நிபந்தனையோடு கூடிய ஒன்றுதான். ஆசியாவிலிருக்கிற மற்ற ஆறு சபைகளுக்கான நிருபங்களில் உள்ளது போன்று, இந்த வாக்குத்தத்தமும், **ஜெயங்கொள்ளுகிறவனுக்குத்தான்.** கிறிஸ்தவர்கள் மீண்டும், மீண்டுமாக பாவம் தொடர்ந்து செய்து பரலோகம் போவோம் என்று எதிர்பார்க்க முடியாது. பாவத்தை விட்டு ஓய முடியாதவர்களை தேவன் நித்தியகாலமாக தண்டிக்கப்போகிறார். (2பேதுரு.2:9-14). ஜெயங்கொள்ளுகிறவன் எல்லாவற்றையும் சுதந்தரித்துக் கொள்வான். (வெளி.21:7) இதுதான்வெளிப்படுத்தின விசேஷத்தின் மையச் செய்தி. வேதாகமம், மனிதன் தன்னை சோதனைக்குட்படுத்தி, பாவம் செய்து, அதன் மூலம்ஜீவவிருட்சத்தின் மீதும், ஏதேன் தோட்டத்தின் மீதும், அவனுக்கு உரிமை மறுக்கப்பட்டதில் ஆரம்பமாகிறது. (ஆதி.2,3). அதே வேதாகமம், நாம் பாவத்தின் மீது வெற்றி கொண்டு, தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளும்போது, ஜீவ விருட்சத்தின் மீது அதிகாரமுள்ளவர்களாக முடியும் என்ற வாக்குத்தத்தோடு முடிகிறது. (வெளி.22:14). பரலோகம் என்பது ஆவிக்குரிய, நித்தியமான இடமாக இருப்பதால் அங்கே, சொல்லர்த்த முறையிலான நிஜமான மரணம் இல்லை. ஆனால், சிருஷ்டிப்பு ஆரம்பித்தபோது இருந்த ஒரு அடையாளத்தை, நித்திய ஜீவனுக்கான நம்பிக்கை நமக்கு உண்டாகும் பொருட்டு, கர்த்தர் உபயோகிக்கிறார். பாவம் மனிதனை வீழ்ச்சியடையச் செய்தது. ஆனால், இயேசுக் கிறிஸ்துவின் மூலம் பாவம் மேற்க்கொள்ளப்பட்டு, நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

**Jon Macon**

**EZSR**

# விசுவாசத்தின் அடிப்படைகள்
## பாடம் - 1

## ஆவிக்குரிய உலகில் அதிகாரம் எங்கிருந்து வருகிறது?

அ) அதிகாரம் என்றால் என்ன?
அதிகாரத்தின் மூலம் கீழ்ப்படுதலைக் கொண்டுவரக் கூடிய உரிமை.

ஆ) ஆகவே, எல்லா மனிதரிலும் யாருக்கு கீழ்ப்படிதலைக் கட்டளையிடக் கூடிய உரிமை இருக்கிறது?

<u>நாங்கள் மிகுந்த நம்பிக்கையோடே தேவன் ஒருவருக்கே அந்த அதிகாரம் உண்டென்று சொல்கிறோம்.</u>
ஏன்? தயவுசெய்து பின்வரும் காரணங்களை சிந்தித்துப் பாருங்கள்.

1. ஆதியாகமம் 1:1 - சிருஷ்டிகர்
2. சங்கீதம் 90:2- நித்தியமானவர்
3. ஆதியாகமம் 1 - இந்த அதிகாரத்தில் ஒன்பது முறை. தேவன் சொன்னார் என்றும், ஒவ்வொரு முறையும் அது அப்படியே ஆயிற்று. அது நல்லது என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. உதரணமாக 1,3,4.அந்தப்பிரகாரம், அவர் சர்வ வல்லவராக இருக்கிறார்.
4. ஆதி 1 : 27 - 2 : 7 மனிதன் தேவனிடமிருந்து வந்தான். அவருக்கே கடமைப்பட்டவன்.
5. எபிரேயர் 1: 3 அவர் எல்லாவற்றையும் தன் முழு கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார்.

இ) பிதாவாகிய தேவன் அந்த அதிகாரத்தை இயேசுவுக்குக் கொடுத்தார்.

1. மத்தேயு 17 : 5, 28 : 18
2. இயேசுவைப் பார்த்து அவருடைய வார்த்தையைக் கேட்டவர்கள் அவருடைய அதிகாரத்தை கண்டு கொண்டார்கள்.
3. இயேசு பேசிய வார்த்தையைகளும், போதித்த போதனைகளும்தேவனுடைய வார்த்தைகளும் போதனைகளுமே.
4. மத்தேயு - 28 : 18

ஈ) இயேசு இந்த பூமியை விட்டுப்போகும்முன் அந்த அதிகாரத்தை தம் அப்போஸ்தலர்களிலிருந்து அந்த அதிகாரத்தை நிறைவேற்றும். வல்லமையைப் பரிசுத்த ஆவியானவரை அனுப்பி நிறைவேற்ற வாக்குத்தத்தம் பண்ணினார்.

1. மத்தேயு 28 : 18 -20
2. யோவான் 16 : 13
3. அப்போஸ்தலர் 1 : 8
4. அப்போஸ்தலர் 2 : 1 -4

உ) அந்த அதிகாரத்தை அப்போஸ்தலர்களும் தேவனால் ஏவப்பட்ட மற்ற மனிதர்களும் பயன்படுத்தினார்கள். அதற்கு தேவனே சாட்சியாக இருந்தும், இவர்கள் மூலம் அற்புதங்களைநடப்பித்தார் (அவர்களுடைய செய்திகள் அவரிடமிருந்து வந்தது என்று உறுதிப்படுத்தினார்)

1. எபிரேயர் 2 : 3, 4,

ஊ) இந்த முறையின் முடிவாக தேவனால் ஏவப்பட்ட மனிதர்கள் தேவனுடைய வார்த்தையைப் பேசி பதிவு செய்தார்கள். அதாவது தேவனுடைய சித்தத்தை.

1. 1 கொரிந்தியர் 2 : 9 - 13
2. 1 தெசலோனி. 2 : 13
3. 1 கொரிந்தியர் 14 : 37

எ) பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்ட இந்த மனிதர்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்ட இந்த தேவ வார்த்தை அதாவது பைபிள் முழுமையானதும் முற்றிலும் போதுமானதுமாக இருக்கிறது. இதற்கு மேல் எந்த வெளிப்பாட்டுக்கும் அவசியமில்லை. உண்மையாக தேவனிடமிருந்து வந்த அவருடைய வார்த்தைகளோடு கூட்டவோ அதிலிருந்து எதையும்குறைக்கவோ கூடாதென்பதற்கான எச்சரிக்கைகள் வேதத்தில் உள்ளது.

1. 1 யோவான் 16 : 13
2. 2 பேதுரு 1 : 3, 4
3. யாக்கோபு 1 : 25
4. யூதா 3
5. உபாகமம் 4 : 2, 12: 32
6. வெளி 22 : 18, 19.

ஏ) பைபிள் தேவனால் ஏவப்பட்ட வார்த்தை என்று சொல்லுவதின் அர்த்தம் என்ன?

1. ஏவப்பட்ட வர்த்ததையின் அர்த்தம் என்ன?
2. பைபிள் தேவனால் கொடுக்கப்பட்டதா?

1. 2 தீமோத்தேயு 3 : 16
2. எரேமியா 1 : 9
3. 2 பேதுரு 1 : 21

## 3. முடிவுரை :

அ) பிதாவாகிய தேவன் ஆவிக்குரியதிலும் மற்ற எல்லாவற்றிலும் மேலான அதிகாரமுடையவர்.

ஆ) அந்த அதிகாரத்தை பிதாவாகிய தேவன் தன்னுடைய குமாரன் இயேசு கிறிஸ்துவிடம் கொடுத்தார்.

இ) கிறிஸ்து தன் பிதாவாகிய தேவனுடைய வார்த்தைகள் அவருடைய அப்போஸ்தலர்களிடமும் ஏவப்பட்ட மற்ற மனிதர்களிடமும் அவருடைய வார்த்தையைப் பேசவும், எழுதி வைக்கவும், அதிகாரம் கொடுத்தார். அவர்கள் அப்படிச்செய்வதற்கு பரிசுத்த ஆவியானவரை அவர்கள் மீது அனுப்பி அவர்களுக்கு வல்லமையைக் கொடுத்தார்.

ஈ) அதனுடைய பலன்தான் பைபிள், தேவனுடைய வார்த்தைகள் தான் பிறகு ஆவிக்குரிய சகலத்திற்கும் அளவு கோலாக இருக்கிறது

1. ஆச்சரியப்படத்தக்க அளவில் வேதத்தைப்பற்றிய இந்த அபாரமான உண்மைகள் எண்ணிப் பாருங்கள்.

   அ) 66 புத்தகங்கள்

   ஆ) வித்தியாசமான கால கட்டங்களில் வாழ்ந்த பல பின்னணிகளை கொண்ட சுமார் 40 ஆசிரியர்கள் எழுதினார்கள்

   இ) 1600 வருடங்களுக்கு மேலாக எழுதப்பட்டது.

   ஈ) மூன்று வித்தயாசப்பட்ட பாஷைகளில் எழுதப்பட்டது.


2. ஆயினும் மனுக்குலத்தின் இரட்சிப்பு என்கிற ஒரே மையக்கருத்தில் முரண்பாடோ சிக்கலோ இல்லை. இயேசு கிறிஸ்துவின் மூலமாய் மனிதனின் இரட்சிப்பும் தேவன் மகிமைப்படுவதும்.

3. எந்தவித மேற்பார்வையுமின்றி 40 இசை வல்லுநர்கள் ஆயிரக்கணக்கான வருடங்கள் தனித்தனியே அமைக்கப்பட்ட இசையை ஒற்றுமையாக வாசித்தால் எப்படியிருக்கும் நினைத்துப்பாருங்கள்.



G. தானியேல்.

**Charlie Di Palma**



# HEAR THE VOICE OF TRUTH
## ON RADIO SRILANKA

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 8.45 -9.00<br>9.00 - 9.15 | Box.3815<br>New Delhi -110049 | SUNNY DAVID |
| ENGLISH | Friday | 7.45 - 8.00 | Box.3815<br>New Delhi -110049 | J.C. CHOATE |
| TELUGU | Sun,Mon<br>Tue, Thu | 2.00 -2.15 | Box . 80<br>Kakinada -533 001 | JOSHUA<br>GOOTAM |
| TAMIL | Sunday<br>Tuesday<br>Thursday<br>Friday | 6.45 - 7.00<br>5.30 - 5.45<br>5.45-6.00<br>5.30 - 5.45 | Box . 8405<br>Bangalore - 560 084 | P.R.SWAMY |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00 | Sunny Meads Lane,<br>Behind Sanskrit<br>College,<br>Trivandrum -695 034 | P.K.VARGHESE |
| KANNADA | Sunday | 1.45 - 2.00 | Box.448<br>Bangalore - 560 004 | ROBERT<br>RATHNAKAR |

***Please write to these address for Bible Correspondence Course***

***Magazines and other Christian Literatures***

**ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST**

REGISTERED NEWS PAPER
RNI No. 47661 / 87 - NEW DELHI

## அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்றுக்கொள்ள விரும்புவோருக்கு ஓர் இனிய செய்தி.

ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட, அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியில் நீங்கள் விரும்பினால் சேர்ந்து பயன் பெறலாம். இது 15 பாடங்களைக் கொண்ட ஓர் இலவசப் பயிற்சி. இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும்.

பயிற்சியில் சேர விரும்புவோர்
தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

இயக்குநர்,
**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி,**
த.பெ.எண் – 27, காங்கேயம் – 638 701.

வெளியிடுவோர்
**கிறிஸ்துவின் சபையார்,**
தாராபுரம் ரோடு, காங்கயம் – 638 701
தமிழ்நாடு, இந்தியா
✆ 04257-20030

**Published by Church of Christ, Kangayam.**
**Printed at Konar Printers, Madurai. Editor : S. RAJANAYAGAM,**